# சைவ நெறி

## தரம்

# 9

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2017
இரண்டாம் பதிப்பு - 2018
மூன்றாம் பதிப்பு - 2019

பதிப்புரிமையுடையது.

ISBN 978 - 955 - 25 - 0147 - 0

**கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் ஆலோசனைகள் பெறப்பட்டு வெளியிடப்படுகின்றது.**

*இந்நூல், கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தினால்,
இல. 30, கெம்பஸ் வீதி, ரத்னபிடிய பொரலஸ்கமுவவில் அமைந்துள்ள
வரையறுக்கப்பட்ட டிஜிஸ்கேன் செக்கியூர் பிறின்ட் சொலூஷன் தனியார்
அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடப்பட்டது.*

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக் கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர்
உற்பத்தி - விநியோகப் பிரிவு
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**சி. காண்டீபன்**
அபிவிருத்தி அலுவலர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ணவேணி**
தலைவர் - நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**கலாநிதி க. இரகுபரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

**சைவப் புலவர் சு.செல்லத்துரை**
அதிபர் (ஓய்வு)

**சிவசுப்பிரமணியம் மகாலிங்கம்**
உதவிப் பணிப்பாளர் (ஓய்வு)
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

## நூலாக்கக் குழு

**வானதி காண்டீபன்**

முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி

தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**வாஹினி ஸ்ரீதரன்**

ஆசிரியர்

திருக்குடும்பக் கன்னியர் மடம்

பம்பலப்பிட்டி.

**கலாநிதி நந்தினி சண்முகலிங்கம்**

அபிவிருத்தி உதவியாளர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

பம்பலப்பிட்டி.

**சைவப் புலவர் சி.ஞானசூரியம்**

மட்டக்களப்பு.

**பாலசுந்தரம்**

பரீட்சை ஆணையாளர் (ஓய்வு)

## பதிப்பாசிரியர் - மொழி

**பா. பாலசிங்கம்**

ஆசிரிய ஆலோசகர்

வலயக் கல்வி அலுவலகம்

யாழ்ப்பாணம்.

**எஸ். வடிவேல்**

ஆசிரியர்

இ/ இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி.

## சரவை நோக்கு

**இ.மகேந்திரன்**

ஆசிரியர்

நோவூட் தமிழ் மகா வித்தியாலயம், நோவூட்.

## சித்திரம்

**ச. தர்ம தாஸ்**

விரிவுரையாளர்

ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி

பத்தனை.

**ஆர்.கௌசிகன்**

பாடசாலை ஒழுங்கை, புகையிரத வீதி

தெஹிவளை.

## முகப்பு வடிவமைப்பு

**சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## நூல் வடிவமைப்பு

**சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**தர்மகுலேந்திரன் சசிரேகா**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**நடேசன் துஷாந்தன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# உள்ளடக்கம்


1 அயனும் மாலும் 1

2 ஒழுக்கம் தரும் விழுப்பம் 7

3 திருஞானசம்பந்தர் தேவாரம் 12

4 பஞ்சாங்கம் 16

5 சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர் 20

6 இல்லறமே நல்லறம் 23

7 திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் 30

8 விரதங்கள் 34

9 ஆடிப்பிறப்பு 39

10 நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 43

11 மங்கையர்க்கரசியார் 49

12 சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் 53

13 அன்பு வழி 57

14 தலயாத்திரை 63

15 உடலும் உயிரும் 68

16 திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு 73

17 நாட்டார் வழிபாடு 80

18 சைவசித்தாந்தத்தில் பாசம் 87

19 ஈழத்தில் சைவசமயம் 92

20 திருமந்திரம் பெரியபுராணம் திருப்புகழ் 98

21 ஈழத்து ஆலயங்கள் 105

# அயனும் மாலும்

1



திருச்சிற்றம்பலம்

செங்கணானும் பிரமனும் தம்முள்ளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

திருச்சிற்றம்பலம்

- *திருநாவுக்கரசர்*

எமது சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். அவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர். பரம்பொருளாகிய சிவபெருமான் பிரமாமூலம் படைத்தல் தொழிலையும் விஷ்ணுமூலம் காத்தல்

தொழிலையும் செய்து வருகிறார். ஒருமுறை படைப்புத் தொழிலுக்கு அதிபதியான பிரமன், தானே அண்ட சராசரம் அனைத்தையும் படைப்பவர் எனப் பெருமிதம் கொண்டார். பிரமனால் படைக்கப்பட்ட அனைத்தையும் காத்தருள்பவர் தானே என்று, விஷ்ணுவுக்கும் அகங்காரம் ஏற்பட்டது.

அவர்கள் இருவருக்கும் தாம்தாம் செய்யும் தொழில்களே பெரியன என்று எண்ணம்; தாமே பெரியவர் என்று அகங்காரம்; இருவர் மனதிலும் இருந்த எண்ணம் வெளிப்பட்டு வாய்த்தர்க்கமும் உண்டாகிவிட்டது. நாம் என்னதான் அரும்பெரும் வேலையைச் செய்தாலும், எவ்வளவுதான் பெரியவராக இருந்தாலும் எம் எல்லாரையும் விடப் பெரியவன் ஒருவன் இருக்கிறான் என்ற எண்ணம் அவர்களுக்கு எழவேயில்லை. தமக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்ற பரம்பொருளை - சிவபெருமானை அவர்கள் மறந்தே விட்டார்கள். ஆணவம் தலைக்கேறினால் அறிவு அங்கே நிற்குமா?

பிரமனுக்கும் திருமாலுக்கும் இடையிலான வாக்குவாதம் முற்றி கலகமாக மாறும் நிலை ஏற்பட்டுவிட்டது. அந்தவேளை திடீரென ஒளிப்பிழம்பு ஒன்று தோன்றியது. சாதாரண ஒளிப்பிழம்பு அல்ல; பேரொளிப் பிழம்பு! கண்ணுக்குள் அடங்காத ஒளி! எல்லையற்ற பேரொளி! எங்கும் வியாபித்த பேரொளி! அதன் அடி எது? முடி எது? எதையும் உணரமுடியவில்லை. வார்த்தைகளால் வருணிக்க முடியாத பேரொளிப் பிழம்பு! அந்த ஒளிப்பிழம்பு தோன்றிய அந்தக் கணமே ''இந்த ஒளிப்பிழம்பின் அடியையோ முடியையோ யார் கண்டு வருகிறாரோ அவரே பெரியவர்'' என்று அசரீரி ஒன்று எழுந்தது.

பிரமாவுக்கும் திருமாலுக்கும் அப்போதும் அறிவு வரவில்லை. அந்த ஒளிப்பிழம்பின் அடியையும் முடியையும் தேடி இருவரும் புறப்பட்டனர். திருமால் அடியைக் கண்டுவிடலாம் என்ற எண்ணத்தில் பன்றி வடிவம் எடுத்து பூமியை அகழத் தொடங்கினார். பிரமாவோ முடியைக் கண்டுவிடுவோம் என்ற நினைப்பில் அன்னப் பறவையாய் மாறிப் பறக்கத் தொடங்கினார். தேடினார்கள்... தேடினார்கள்... நாட்கள் மாதங்களாய், மாதங்கள் வருடங்களாய், வருடங்கள் யுகங்களாயின. யுகயுகமாய்த்

தேடினார்கள், ஆணவத்தோடு தேடினார்கள், தேடிக் கண்டுகொள்ள முடியவில்லை. அடியைத் தேடிச் சென்ற திருமால் தன் இயலாமையை உணர்ந்து திரும்பிவிட்டார்.



பிரமா முடியைக் கண்டுவிடலாம் என்று முடிவெடுத்துப் பறந்து கொண்டேயிருந்தார். அவரது தேடுதல் முடிந்தபாடாய் இல்லை. ஒரு நிலையில் இனித் திரும்பவேண்டியதுதான் என்று எண்ணினார். அந்தவேளை, சிவபெருமானது திருமுடியில் இருக்கும் பேறுபெற்ற தாழம்பூ ஒன்று, அங்கிருந்து தவறிவிழுந்து கீழ்நோக்கி வந்து கொண்டிருந்தது. பெரிய தவறு ஒன்றைச் செய்வதற்குத் தயாராக வந்துகொண்டிருந்தது. பிரமா அந்தத் தாழம்பூவைக் கண்டார்; ஆளரவமே இல்லாத பெருவெளியில் தாழம்பூவைக் கண்ட பிரமாவுக்குப் பெரு மகிழ்ச்சி! ''நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?'' என்று தாழம்பூவிடம் கேட்டார்.

தாழம்பூ விடயத்தைச் சொன்னது. அது இறைவனது திருமுடியிலிருந்து வந்து கொண்டிருக்கின்றது என்று அறிந்ததும் பிரமாவின் புத்தி தவறான வழியில்

சிந்திக்கத் தொடங்கிவிட்டது. பிரமா தாழம்பூவிடம் சரணடைந்தார்; தன்னுடைய வரலாற்றைக்கூறி அதனிடம் உதவி கோரினார்; ''தாழம்பூவே, நான் தளர்ந்துவிட்டேன். இதற்குமேல் என்னால் மேலே செல்ல முடியும் என்று நான் நம்பவில்லை. தயவுசெய்து, நான் சிவபிரானின் திருமுடியைக் கண்டுகொண்டதாக சாட்சி சொல்லவேண்டும். உனக்கு நன்றியாய் இருப்பேன்.'' என்று மிக இரந்து வேண்டினார்.

''படைப்புத் தொழிலுக்கே அதிபதியான பிரமா என்னிடம் இரக்கிறாரே! பாவம் அவருக்கு உதவுவோம்! பொய் ஒன்றுதானே..... சொல்லி விடுவோம். பெரியவர்களின் போட்டியில் சாட்சியாக நிற்கும் பெருமையும் எனக்கு வந்து சேருகிறதே!'' என்று எண்ணிய தாழம்பூ, பிரமனின் வேண்டுகோளுக்கு இணங்கியது.

என்ன செய்வது? 'கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே'. பிரமனும் தாழம்பூவோடு கீழிறங்கத் தொடங்கினார். பாதாளம் எல்லாம் அகழ்ந்து களைத்து கர்வம் அடங்கிய திருமால் மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே வந்து சேர்ந்தார். அங்கு வந்த பிரமா, தான் சிவபிரானின் முடியைக் கண்டுவிட்டதாகத் திருமாலிடம் பெருமை பேசினார்; திருமால் நம்ப மறுத்தார்; பிரமா தாழம்பூவைச் சாட்சிக்கிழுத்தார். தாழம்பூவும் பிரமாவுக்குச் சார்பாகத் தலையாட்டியது.

தவறிழைத்த இருவருக்கும் இறைவன் தண்டனை வழங்கினான்: ''பொய் உரைத்த பிரமாவுக்கு இனி இந்த உலகில் கோவில் கிடையாது. பொய் உரைத்த தாழம்பூவுக்கு இனி பூசைக்குப் பயன்படும் அருகதை கிடையாது!'' அகந்தையை விடாது, பொய்யாகவேனும் தன்பெருமையை நிறுவ முனைந்த பிரமா, உலகத்தவரின் வழிபாட்டை, மதிப்பை இழந்தார். பொய்ச்சாட்சி சொன்ன தாழம்பூவும் பூசைக்குரிய தன் தகுதியை இழந்தது.

திருமாலும்பிரமனும்செருக்கொழிந்துஇறைவனைச்சரணடைந்தனர்.இருவரும் இலிங்கம் அமைத்து இறைவனை வழிபட்டனர். சிவபெருமான் தோன்றி அவர்களுக்கு

அருள் புரிந்தார்; பின் சோதியினுள் மறைந்தருளினார். அனற்பிழம்பாகிய அச்சோதி குளிர்ந்து ஒரு மலையாக ஒடுங்கியது. அதுவே திருவண்ணாமலை. சோதிப்பிழம்பாகத் தோன்றிய இறைவன் திருமால், பிரமன் இருவருக்கும் அருள் புரிந்த நாளையே நாம் திருக்கார்த்திகைத் தீபவிழாவாகக் கொண்டாடுகிறோம். அன்று சொக்கப்பனை எரித்து, இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றிய அருட்செயலை ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். திருக்கார்த்திகை விளக்கீட்டு விழா திருவண்ணாமலையிலே மிக விசேடமாக நடைபெறுகின்றது. இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றிய நாளை நாம் சிவராத்திரி தினமாக அனுட்டிக்கிறோம்; விரதமிருக்கிறோம். சிவராத்திரி தினத்தில் வரும் இலிங்கோற்பவகாலமே இறைவனின் அந்த அருட்செயல் நிகழ்ந்த காலமாகும். அந்த முகூர்த்தத்தில் இலிங்கோற்பவ மூர்த்திக்கு விசேட வழிபாடுகள் இயற்றப்படுகின்றன. இலிங்கோற்பவ மூர்த்தம், மாலும் அயனும் காணமுடியாதவாறு இறைவன் சோதிப்பிழம்பாகத் தோன்றியருளிய அருட்செயலை உணர்த்துகின்றது.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. பிரமாவினதும், விஷ்ணுவினதும் தொழில்கள் யாவை?
2. பிரமாவுக்கும், விஷ்ணுவுக்கும் முரண்பாடு ஏற்பட்டதற்கான காரணம் யாது?
3. இறைவன் எதற்காக சோதிவடிவில் தோன்றினான்?
4. பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் அசரீரி கூறிய செய்தியாது?
5. நடந்த போட்டியில் இருவருமே தோல்வியடைந்தமைக்கான காரணம் யாது?
6. பிரமாவுக்கும் தாழம்பூவுக்கும் கிடைத்த தண்டனைகள் நமக்கு உணர்த்தும் படிப்பினைகள் யாவை?
7. இக்கதையினால் உணர்த்தப்படும் இறைவனின் பெருமை யாது?

## குழுச் செயற்பாடு

1. அயனும் மாலும் கதையை நாடகமாக்கி நடியுங்கள்.

2. இலிங்கோற்பவ மூர்த்தத்தைக் காட்சிப்படுத்தி அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.

# ஒழுக்கம் தரும் விழுப்பம்

# 2

விழுப்பம் என்றால் மேன்மை என்று பொருள்படும். விழுப்பம் தருவனவே விழுமியங்கள், அதாவது மனிதரை மேன்மையுறச் செய்பவை விழுமியங்கள். உயர்ந்த ஒழுக்கங்களே மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவன. நன்னடத்தைகள், நற்பண்புகள் என்பன மனித விழுமியங்கள் ஆகும். சத்தியம், தர்மம், அமைதி, அன்பு, அஹிம்சை முதலானவை அடிப்படை மனித விழுமியங்கள். சமாதானம், நட்பு, புரிந்துணர்வு, மனித நேயம் முதலான அனைத்தையும் மனித விழுமியங்களினூடாகக் கட்டியெழுப்பலாம்.

## சமூக நல்லிணக்கம்



மனிதன் ஒரு சமூகப் பிராணி. சமூகமாகக் கூடி வாழ்தலே மனித இயல்பு. மனிதனால் தனித்து வாழ முடியாது. ஒருவரில் ஒருவர் தங்கியே வாழ வேண்டும். இன்று பல்வேறு காரணிகளால் மனிதர்கள் தம்மைப் பிரிவினைக்குட்படுத்தி விட்டனர். இனம், மதம், நாடு எனப் பிரிந்திருப்பினும் ஒருவரிலொருவர் தங்கியிருத்தல் என்பது தவிர்க்க முடியாதது.

குடும்பங்கள் பல சேர்ந்ததே சமூகமாகும். குடும்பங்களில் அமைதி, சந்தோசம் நிலவும் போதே சமூகத்திலும் அமைதி, சந்தோசம், அபிவிருத்தி என்பன ஏற்படும். சமூகத்தில் உள்ள மக்களிடம் ஐக்கியம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, பொறுமை முதலிய பண்புகள் காணப்பட வேண்டும். போட்டி, பொறாமை, வஞ்சனை, சந்தேகம் முதலிய தீய குணங்கள் ஒழிக்கப்படல் வேண்டும். அனைவரும் மனிதர்கள் என்ற ரீதியில் சமமானவர்கள். அனைவரிலும் ஓடும் இரத்தமும் பெருகும் வியர்வையும் கண்ணீரும் ஒன்றே. உணர்ச்சிகளால் மனிதர்களுக்கிடையே எந்த வேறுபாடும் இல்லை. பசி, தூக்கம், சுகம், துக்கம் முதலான அனைத்தும் அனைவருக்கும் உள்ளனவே. எனவே அனைவரும் பரந்த மனதுடன் அன்பு, கருணை, இரக்கம் கொண்டவராகி ஒருவரோடொருவர் உறவு கொள்வார்கள் எனில் சமூக நல்லிணக்கம் தானாகவே உருவாகும். எல்லா மனிதரும் இறைவனின் படைப்புகளே. இறைவனே அனைவருக்கும் தாயும் தந்தையும் ஆவார். ஆகவே மனித குலம் ஒரு குடும்பம், அனைவரும் சகோதரர்கள் எனும் மனப்பாங்கு கொண்டு வாழ்வதே சமூக நல்லிணக்கத்துக்கான வழியாக அமையும்.

## கூட்டுப்பொறுப்பு



'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'. கூடி வாழும் வேளையில் குடும்பத்திலோ சமூகத்திலோ சில பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடலாம். அவ்வேளைகளில் அவற்றைப் பெரிதுபடுத்தாது விட்டுக் கொடுப்புடனும் ஒற்றுமையுடனும் செயற்படும்போது வெற்றி இலக்கை நிச்சயம் அடைய முடியும். பலரும் சேர்ந்து செய்ய வேண்டிய ஒரு பணியைச் செய்யும்போது ஒவ்வொருவரும் தத்தமது பங்கை உணர்ந்து அப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு

விசுவாசத்தோடு செயற்படுவதே கூட்டுப்பொறுப்பாகும். அதில் வெற்றியோ தோல்வியோ அனைவருக்கும் பங்குண்டு என ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் கூட்டுப்பொறுப்பே. தனியாகச் செய்ய முடியாத பல காரியங்களை கூட்டாகச் சேர்ந்து பொறுப்புடன் செய்வதால் வெற்றியை இலகுவில் அடையமுடியும். கூட்டாகச் செயற்படும்போது சகிப்புத்தன்மையும் அவசியமாகும்.

சகிப்புத்தன்மை இல்லை எனில் பிரிவினை ஏற்படும். பிரிவினை ஏற்படின் தோல்வியையே தழுவ நேரிடும். கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதற்கு புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, தலைமைத்துவத்துக்குக் கீழ்ப் படிதல், கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் மனப்பாங்கு முதலிய பண்புகளையும் வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

## சகிப்புத்தன்மை



'பொறுத்தார் பூமியாள்வார்' - இது பொன்மொழி. மகாபாரதத்தில் வரும் தருமர் சகிப்புத்தன்மையின் சிகரமாக விளங்குகிறார். சகிப்புத்தன்மை என்றால் என்ன? எந்தவொரு சூழ்நிலையிலும் மனம் தளம்பாது பொறுமை காத்தலே

சகிப்புத்தன்மை ஆகும். ஒருவன் காய்த்த மரத்திற்குக் கல்லை எறிகிறான். ஆனால் அந்த மரமோ அவனுக்குப் பழத்தைக் கொடுக்கிறது. கல்லெறியும் மனிதனுக்குப் பழம் கொடுக்கும் மரமாக எம்மால் வர முடியுமா? சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொண்டால் அதுவும் சாத்தியமே. சகிப்புத்தன்மையை தலையாய பண்பாக வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.''

நிலமானது தன்னை அகழ்பவரையும் தாங்கிக் கொள்கிறது. அதுபோல நாமும் சகிப்புத்தன்மையை நம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்வதற்கு இடைவிடாத மனப்பயிற்சி தேவை. இறைவனை நாள்தோறும் மன அமைதியுடன் தியானித்தல் மூலம் மனதைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். ஒருவர் தவறு செய்யும்போது நாமும் தவறு செய்யக் கூடியவர்களே என்று எண்ணுவதோடு, அத்தவறு தற்செயலாகவே நிகழ்ந்தது என்றும் எண்ணுதல் வேண்டும். இவ்வாறாக மனதைப் பக்குவப்படுத்திக் கொள்வதும் சகிப்புத்தன்மையை வளர்ப்பதற்கு உதவும். கோபம், பேராசை, பொறாமை முதலிய தீய குணங்களே சகிப்புத்தன்மையை இல்லாமற் போகச் செய்கின்றன. யாவரிடத்தும் அன்பு வைத்தால் சகிப்புத்தன்மை தானே வந்துசேரும்.

எங்கள் மனம் நல்ல நிலம் போன்றது. நல்லெண்ணங்கள் என்னும் நல்ல விதைகளை விதைத்தால் நற்பண்புகள், நற்செயல்களாகிய பயிர்கள் நன்கு வளர்ந்து எமக்கும் பிறர்க்கும் நன்மையைத் தரும்.

''ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்''

என்கிறார் திருவள்ளுவர். எனவே சகிப்புத்தன்மை என்ற அணிகலனை அணிந்து என்றென்றும் மேன்மையானவராக வாழ நாம் முயற்சி செய்ய வேண்டும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. மனிதரிடம் இருக்கவேண்டிய நற்பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
2. சமூக நல்லிணக்கத்தோடு வாழ்வதற்கு நாம் வளர்த்துக்கொள்ள வேண்டிய மனப்பாங்குகள் யாவை?
3. கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?
4. மகாபாரதத்தில் வரும் தருமர் எப்பண்பு காரணமாகப் போற்றப்படுகிறார்?
5. சகிப்புத்தன்மையை எவ்வாறு வளர்த்துக்கொள்ளலாம்?

## குழுச் செயற்பாடு

சமூக நல்லிணக்கம், கூட்டுப்பொறுப்பு, சகிப்புத்தன்மை முதலான விழுமியங்களின் அவசியத்தை வலியுறுத்தும் கதைகளை குழுக்களாக இணைந்து எழுதுங்கள்.

# திருஞானசம்பந்தர் தேவாரம்

3



## தேவாரம் - 1

திருஞானசம்பந்தருக்கு உபநயனம் நடைபெற்றது. அப்பொழுது அவர் திருப்பதிகம் ஒன்றைப் பாடியருளினார். அப்பதிகம் திருவைந்தெழுத்தின் மகிமையை எடுத்துரைப்பதாய் அமைந்தது. அதனால் அப்பதிகம் 'பஞ்சாட்சரப் பதிகம்' எனப்படும். அப்பதிகம் மூன்றாம் திருமுறையில் அடங்குகின்றது. கீழே அப்பதிகத்தின் முதலாவது திருப்பாடல் தரப்பட்டுள்ளது.

தலம் - பொது

பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்தும்மே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

உறங்கும் பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், மனங் கசிந்து, நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை நாள்தோறும் மனத்தில் நினையுங்கள். மார்க்கண்டேயர், மனத்தில் வஞ்சகம் இல்லாது சிவன் திருவடியைப் போற்றி நின்றவேளையில், அவரது உயிரைக் கவர்வதற்காக வந்த காலன் (யமன்), பயப்படும்படியாக அவனை உதைத்து, மார்க்கண்டேயரின் உயிரைப்பாதுகாத்தது நமசிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரமேயாகும்.

## தேவாரம் - 2

சம்பந்தப்பெருமான் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு மீண்டும் சீர்காழித் தலத்தை வந்தடைந்தார். பெற்றோரின் விருப்பப்படி திருநல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்தில் அவருக்குத் திருமணம் நடைபெற்றது. அவ்வேளை சம்பந்தப் பெருமான் அத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கி திருவைந்தெழுத்தின் பெருமையை உலகினர்க்கு உணர்த்தும் வகையில் 'காதலாகி ....' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்பதிகம் 'நமச்சிவாயப் பதிகம்' என்று போற்றப்படுகிறது.

தலம் - திருநல்லூர்ப்பெருமணம் பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

மிகுந்த அன்புடன், மனம் கசிந்து உருகி, கண்ணீர் பெருக ஓதுபவர்களை, நன்னெறிக்கு உய்த்தருளுவதும் நால்வேதங்களதும் உண்மைப்பொருளாக விளங்குவதும் சர்வலோக நாயகனாகிய சிவபெருமானின் நாமமாகிய நமசிவாய என்ற மந்திரமேயாகும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. திருஞானசம்பந்தர் தமது உபநயனத்தின்போது பாடியருளிய திருப்பதிகத்தின் பெயர் என்ன? அப்பெயர் பெற்றமைக்கான காரணம் யாது?
2. பஞ்சாட்சர மந்திரம், யாரிடமிருந்து யாரைக் காப்பாற்றியது?
3. 'காதலாகி' என்ற தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
4. இத்தேவாரத்தில் 'நமசிவாய' மந்திரத்தின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுபவை யாவை?
5. இத்தேவாரம் இடம்பெற்றுள்ள பதிகம் எது?

## குழுச் செயற்பாடு

தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.

# பஞ்சாங்கம் 4

பஞ்சாங்கம் என்பது வானியல் அடிப்படையிலான கால அட்டவணை ஒன்றாகும். சாதாரண வாழ்க்கையோடும் சமயத்தோடும் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கான காலநேரங்களை அறிந்து கொள்வதற்கும் சோதிடக் கணிப்பீடுகளுக்கும் இந்துக்கள் பஞ்சாங்கத்தையே பயன்படுத்துகிறார்கள்.







நவீன கருவிகள் இல்லாத பண்டைய காலத்திலே முனிவர்கள் தங்கள் ஞானத்தால் கிரகங்களின் போக்குகளை துல்லியமாகக் கணித்துக் கூறியிருக்கிறார்கள். அத்தகைய வானியல் அறிவின் பெறுபேறுகளுள் ஒன்றே பஞ்சாங்கமாகும்.

பஞ்சாங்கம் என்ற சொல் ஐந்து உறுப்பு (பஞ்ச + அங்கம்) என்று பொருள்படும். இந்து மரபிலான கால அளவீட்டு அலகுகளான,

**வாரம்**

**திதி**

**நட்சத்திரம்**

**கரணம்**

**யோகம்** என்னும் ஐந்துமே அந்த அங்கங்களாகும்.

## 1. வாரம்

வாரம் என்பது ஞாயிறு முதல் சனி வரையிலான ஏழு தினங்களைக் குறிக்கின்றது. வாரம், கிழமை என்பன உரிமை என்று பொருள்படும் சொற்கள். ஞாயிற்றுக் கிழமை என்றால் ஞாயிற்றுக்கு அதாவது சூரியனுக்கு உரிய நாள் என்பது பொருள். அவ்வாறே சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனீஸ்வரன் ஆகிய கிரகங்களுக்கு உரிய நாட்கள் முறையே திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை எனப்படுகின்றன.

## 2. திதி

திதி என்பது பூமியைச் சுற்றிவரும் சந்திரனின் சுற்றுப் பாதையின் முப்பது சம பிரிவு ஒவ்வொன்றையும் சந்திரன் கடக்க எடுக்கும் கால அளவைக் குறிக்கும். சந்திரனின் சுற்றுப்பாதை சுக்கில பட்சம் (வளர் பிறை), கிருஷ்ண பட்சம் (தேய்பிறை) என்னும் சம அளவுள்ள இரு பக்கங்களைக் கொண்டது. அமாவாசை, பூரணை என்னும் இரண்டோடு வளர்பிறையில் பதினான்கும் தேய்பிறையில் பதினான்குமாக திதிகள் முப்பது.

## 3. நட்சத்திரம்

ரவிச் சக்கரம் ஒவ்வொன்றும் 13. 33 பாகை அளவிலான இருபத்தேழு பகுதிகளாக அமைந்துள்ளன. பூமியைச் சுற்றிவரும் சந்திரன் குறித்த நேரத்தில் அந்த இருபத்தேழு பகுதிகளில் எப்பகுதிக்குள் நிற்கிறதோ அந்தப் பிரிவுக்குரிய நட்சத்திரமே அக்குறித்த நேரத்துக்குரிய நட்சத்திரமாகும். அவ்வகையில் அஸ்வினி முதல் ரேவதி வரையிலான இருபத்தேழு நட்சத்திரங்கள் குறிப்பிடப்படுகின்றன.

## 4. கரணம்

கரணம் என்பது ஒரு திதியின் அரைப் பங்கு ஆகும். ஒரு திதியின் முற்பாதி ஒரு கரணமும் பிற்பாதி மற்றொரு கரணமுமாகும். அவ்வகையில் முப்பது திதிகளும் அறுபது கரணங்களாக அமைகின்றன.

## 5. யோகம்

சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி யோகம் எனப்படும். அவ்வகையில் இருபத்தேழு நட்சத்திரங்களையும் கடக்கும் காலப்பகுதியாக இருபத்தேழு யோகங்கள் குறிப்பிடப் பெறுகின்றன.

நாம் அனுட்டிக்கும் விரதங்கள், நமது கோவில்களில் இடம்பெறும் உற்சவங்கள், நமது முன்னோர்களை நினைவு கூர்ந்து செய்யப்படும் அபரக்கிரியைகள் முதலான யாவற்றுக்குமான காலக்கணிப்பு இந்தக் கால அலகுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. கோயில் கும்பாபிடேகம், திருமணம், புதுமனை புகுவிழா முதலான சுபகருமங்களுக்கான சுபவேளைகள் பஞ்சாங்கத்தின் அடிப்படையிலேயே கணிப்பிடப்படுகின்றன.

நமது நாட்டில் பிரதானமான இரண்டு வகைப் பஞ்சாங்கங்கள் புழக்கத்தில் உள்ளன. அவையாவன:

1. வாக்கிய பஞ்சாங்கம்
2. திருக்கணித பஞ்சாங்கம்

வாக்கிய பஞ்சாங்கமானது, பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் ரிஷிகள் அருளிய கணித முறையை அப்படியே ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையிலே எழுதப்படுவது. திருக்கணித பஞ்சாங்கம், சந்திரனது வட்டப்பாதையில் அவ்வப்போது ஏற்படும் இயக்கநிலை வித்தியாசத்தை கணக்கிலெடுத்து எழுதப்படுவது. இருவகைப் பஞ்சாங்கங்களும் காலக் கணிப்பீட்டில் சிறு அளவில் வேறுபடுவது உண்டு.

காலம் என்பது இயற்கையின் கூறுகளில் அடிப்படையான ஒரு அம்சம். அது எல்லையற்றது. எனினும் பூமியோடு தொடர்புபட்ட கிரகங்களின் இயக்கத்தின் அடிப்படையில் நாம் காலத்தைப் பாகுபடுத்திக் கணிப்பீடு செய்கிறோம். கிரகங்களும் அவற்றின் இயக்கத்தால் உண்டாகும் மாற்றங்களும் நமது அக, புற வாழ்க்கையைத் தீர்மானிக்க வல்லன என்று நம்புகிறோம். அவற்றால் விளையும் நன்மையும் தீமையும் கலந்த நமது வாழ்க்கை இறையருளால் எந்தத் தீமையும் இன்றி நன்மையாக முடியும்.

'நாளும் கோளும் நம்பரடியார்க்கு நலிவு செய்யா.' ஞானக்குழந்தையாகிய சம்பந்தர் பாடியருளிய கோளறு பதிகத்தின் சாராம்சம் இதுவே. இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமானவர்களைக் கிரகங்கள் பாதிக்காது என்பதை அருளாளர் பலர் தங்களின் பாடல்களினூடாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. பஞ்சாங்கம் என்பது யாது?
2. பஞ்சாங்கத்தின் உறுப்புகள் எவை?
3. பட்சங்கள் எத்தனை? அவை எவை?
4. யோகம் என்றால் என்ன?
5. கரணம் என்றால் என்ன?
6. நட்சத்திரங்கள் எத்தனை? நான்கு உதாரணங்கள் தருக.
7. நமது நாட்டில் பயன்படுத்தப்படும் பஞ்சாங்கங்கள் எவை?
8. பஞ்சாங்கம் பார்த்து நாம் செய்யும் காரியங்கள் மூன்று எழுதுக.

## குழுச் செயற்பாடு

1. பஞ்சாங்க நாட்காட்டியின் உதவியுடன் திதிகளை அறிந்து எழுதுங்கள்.
2. பஞ்சாங்கத்தின் துணையுடன் உங்கள் பிறந்த நட்சத்திரத்தை அறிந்து பிறந்தநாளைக் கொண்டாடுங்கள்.

# சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர் 5

சைவசமய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய சமயப் பெரியார்கள் பலர் வாழ்ந்த திருநாடு ஈழநாடு. அந்நியராட்சியின் போது சைவசமய மறுமலர்ச்சிக் காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர், ஐந்தாம் குரவர் என்று போற்றப்படும் நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆவார். இராமகிருஷ்ணமிஷன் ஊடாக சமய எழுச்சியை உண்டுபண்ணிய மகான் விபுலானந்த அடிகளாவார். சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணாசலம் இந்துபோர்ட் சு. இராசரத்தினம் முதலான சான்றோர்கள் சைவசமய வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றியவர்கள். மட்டக்களப்பு நகரில் சைவசமய எழுச்சிக்காகத் தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த ஒருவரே சைவப்புலவர் கா. அருணாசல தேசிகர் ஆவார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புளியந்தீவு என்னும் ஊரிலே காசிநாத சோதிடருக்கும் சின்னப்பிள்ளை அம்மையாருக்கும் மகனாக 1888 ஆம் ஆண்டு அருணாசலம் பிறந்தார். சிறுவயதிலிருந்தே அவரது வீட்டுக்கு அருகிலுள்ள ஆனைப்பந்திப் பிள்ளையார் ஆலயத்தில் தொண்டு செய்வதில் ஈடுபட்டுவந்தார். அந்த ஆலயத்தைச் சார்ந்த திண்ணைப் பள்ளியில் வித்தியாரம்பம் மேற்கொண்டு கற்றுவரலானார். பின்னர் மட்டக்களப்பு அரசடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் இணைந்து கல்வியைத் தொடர்ந்தார்.

அருணாசலதேசிகரவர்கள் நற்பிட்டிமுனை சைவப் பாடசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். பின் ஆனைப்பந்தி சைவப் பாடசாலையில் ஆசிரியராக இணைந்து, தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்து 1949 இல் ஒய்வு பெற்றார்.

சைவப்புலவராக விளங்கிய அருணாசலம் அவர்களை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த அவிநாசாநந்த அடிகளார் 'தேசிகர்' என்னும் பட்டம் சூட்டிப் பெருமைப்படுத்தினார். மட்டக்களப்பு தமிழ்க் கலை மன்றம் 1952 ஆம் ஆண்டு 'தேசிகமணி' என்ற பட்டத்தைச் சூட்டி இவரைக் கௌரவித்தது. 1964 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற அகில இலங்கை சைவப் புலவர் சங்க மகாநாட்டில் 'சித்தாந்த சிகாமணி' என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். இவையெல்லாம் இவரின் தமிழ்ப் புலமைக்கும் சைவசித்தாந்தப் புலமைக்கும் கிடைத்த கௌரவங்களாகும்.

அருணாசல தேசிகர், சைவத்தின் உயர்ச்சிக்காக மட்டக்களப்பு சைவக் கோயில்களில் தனது பதினைந்தாவது வயது முதல் பிரசங்கம் நிகழ்த்திவந்தார். சைவசமயத்தவர் தம் அகவாழ்விலும் புறவாழ்விலும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதே இவரது சொற்பொழிவுகளின் பிரதான பொருளாக இருந்தது. சிறுதெய்வ வழிபாட்டு முறையிலிருந்து ஆகம வழிபாட்டை நோக்கி மாற்றமடைந்த மட்டக்களப்புச் சூழலில் ஆகம முறைக்கு விளக்கம் தருபவராக இவர் விளங்கினார். சைவசமய ஆசாரங்களைப் பேணுவதையும் ஒழுக்கத்தோடு வாழ்வதையும் எல்லா உயிரையும் தன்னுயிர்போல் நேசிப்பதையும் சமயநூல்களைக் கற்று அறிவு பெறுவதையும் வலியுறுத்தும் வகையிலே இவரது சொற்பொழிவுகள் அமைந்திருக்கும். கதைகள், பொருத்தமான மேற்கோள்களைக் கூறியும் பாடல்கள் பாடியும் தான் கூறவந்த பிரதான விடயத்தை விளக்கி உரைக்கும் இவரது பாணி தனித்துவமானது.

சைவசித்தாந்தப் பேருண்மைகளைத் திரட்டி சைவசமய ஆரம்ப போதினி, சைவ சமய இளைஞர் போதினி, சைவ இலக்கிய கதாமஞ்சரி, சைவசமய சிந்தாமணி, மெய்ஞ்ஞான தீபம் அடங்கலாக பன்னிரண்டு நூல்களைத் தேசிகர் ஆக்கினார். அவற்றுள் ஆறு நூல்கள் 'சைவசமயக் களஞ்சியம்' என்ற பெயரில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இவரது நூல்களில் சைவசமய சிந்தாமணிக்குத் தனிச் சிறப்புண்டு. சைவ சமயத்தை முழுமையாக அறிந்து கொள்ளத்தக்கவகையில் ஒரே நூலாக இது எழுதப்பட்டுள்ளது.

தேசிகரவர்கள், முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலானந்தரவர்களுடன் நெருக்கமான உறவு பூண்டவர்; சுவாமி விபுலானந்தரின் சமய, சமூகப் பணிகளுக்கு உறுதுணையாய் விளங்கியவர். குறிப்பாக சைவப்பாடசாலைகளை நிறுவும் சமூகப் பணியில் துணைநின்றவர்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் பிறசமயத் தாக்கங்களிலிருந்து சைவத்தைக் காப்பதிலும் ஆகம வழிபாட்டு மரபை நிலைநிறுத்துவதிலும் மகத்தான பணி ஆற்றிய தேசிகர் தமது எண்பத்தோராவது வயதில் (1969) இல் இறையடி எய்தினார்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. அருணாசலம் அவர்கள் சிறுவயதுமுதல் சமயப்பற்று மிக்கவராக விளங்கியமைக்குச் சான்று யாது?
2. அவர் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றிய பாடசாலை எது?
3. அவருக்கு வழங்கப்பெற்ற பட்டங்கள் யாவை?
4. தேசிகரது நூல்களில் சைவசமய சிந்தாமணி, சைவசமயக் களஞ்சியம் என்பவற்றின் சிறப்புக்கள் யாவை?
5. தேசிகர் ஆற்றிய சமயப் பணிகள் யாவை?
6. தேசிகர் ஆற்றிய சமூகப் பணிகள் யாவை?

## குழுச் செயற்பாடு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர் ஆகியோரின் பணிகள் பற்றி, பேச்சொன்றை நிகழ்த்துங்கள்.

# இல்லறமே நல்லறம் 6



எமது முன்னோர் மனிதனின் வாழ்க்கையில் நான்கு படிநிலைகளைக் கூறியுள்ளனர். அவை பிரமச்சரியம் (மாணவ நிலை) கிருகஸ்தம் (இல்லறம்), வானப்பிரஸ்தம் (துறவுக்கு ஆயத்தமாகும் நிலை), சந்நியாசம் (துறவுநிலை) என்பனவாகும். நூல்களைக் கற்று, அறிவை வளர்த்து, வாழ்க்கைக்கான பண்புகளை வளர்க்கும் காலம் பிரம்மச்சரியம் எனப்படும். கல்விப் பருவம் முடிந்த பின்னர் வாழ்க்கைத்துணை ஒன்றுடன் சேர்ந்து இல்லறத்தில் இணைந்து பிள்ளைகளோடு கூடி வாழுதல் இல்லறம் எனப்படும். இல்லம் என்றால் வீடு. அறம் என்றால் தர்மம். தர்மம் என்பது அவரவர் கடமைகளைக் குறிப்பதாகும். அறத்தால் வருவது இன்பமாகும். ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைச் சரிவரச் செய்தால் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமையும்.

குடும்பத் தலைவன், நல்ல வழியிலே பொருள் தேடி நல்ல கணவனாக, நல்ல தந்தையாக, நல்ல சமூக உறுப்பினராக தனது கடமைகளைச் செவ்வனே செய்ய வேண்டும். குடும்பத்தலைவி, வருமானத்துக்குக் தக்க வழியில் குடும்பத்தை நிர்வகித்தல், பிள்ளைகளை வழிப்படுத்தல் முதலான பொறுப்புக்களைக் கொண்டுவாழ்தல் வேண்டும். பிள்ளைகள் நல்லொழுக்கத்துடன் பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் பணிவுடையவர்களாய் வாழ்ந்து, கற்றல் முதலான தமது கடமைகளில் செவ்வனே ஈடுபட வேண்டும். குடும்பத்தில் அனைவரிடமும் ஒற்றுமை, அன்பு, தியாகம், அர்ப்பணிப்பு முதலான பண்புகள் இருத்தல் வேண்டும். குடும்பத்திலும் சமூகத்திலும் உள்ள பெரியவர்களை மரியாதையுடன் பேணுதல் வேண்டும். அவர்களின் ஆலோசனைகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

இல்லறம் நல்லறம் ஆகும்போது நல்லறிவையும் நல்ல அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளலாம். நற்பண்பு மிக்க குடும்பங்களினால் சமூகமும் உலகமும் பயன்பெறும். உலகம் பயன்பெற வாழ்தலே நல்ல இல்லறமாகும். திருவள்ளுவரும் இல்லறத்தார், பல தரப்பினருக்கும் உரிய கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

**''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.''**

## பிதிர் வழிபாடு



இங்கு, திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள தென்புலத்தார் எனப்படுவோர் யார்? அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவை? இவ்வுலகில் வாழ்ந்து, தமது சரீரங்களை விட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் தெற்குத் திசையில் வாழ்வதாகக் கருதப்படுகிறது. இறந்துபோன எமது மூதாதையர்களை நாம் தென்புலத்தார் (பிதிர்கள்) என்று போற்றுகின்றோம். அவர்களுக்குச் செய்யும் வழிபாடே பிதிர் வழிபாடு எனப்படுகிறது. இல்லறத்தில் வாழும் ஒருவர் செய்யும் பிதிர் வழிபாடு களாக அந்தியேட்டி, சிரார்த்தம், ஆண்டுத்திவசம், மகாளயம் முதலானவை உள்ளன. இறந்த தந்தைக்கு ஆடி அமாவாசையிலும் தாய்க்கு சித்திரா பௌர்ணமியிலும் பிதிர்க்கடன் செய்வர். கீரிமலை, மாமாங்கம், முன்னேஸ்வரம் முதலானவை பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு உகந்த தலங்களாகச் சிறப்புப் பெற்றுள்ளன. பிதிர் வழிபாட்டினை மேற்கொள்வதால் மூதாதையர்களின் ஆசி கிட்டும்; வாழ்வில் துன்பம் நீங்கி இன்பம் பெருகும்.

## தேவ வழிபாடு



இல்லறத்தானுக்குரிய கடமைகளில் தேவர்களை வழிபாடு செய்வதும் உள்ளடக்கப்பட்டுள்ளது. வேதகாலத்து மக்கள் இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபட்டனர். இருக்கு வேதத்தில் இந்திரன், வருணன், அக்கினி, சூரியன் முதலிய தேவர்கள் மீதான துதிப்பாடல்கள் காணப்படுகின்றன.

தேவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக யாகங்கள் செய்யப்பட்டன. யாகத்தில் சொரியப்படும் ஆகுதிகளை அக்கினிதேவன் எடுத்துச்சென்று தேவர்களிடம் சமர்ப்பிக்கிறான். யாகங்கள் செய்யும்போது ஓதப்பெறும் வேத மந்திரங்களின் அதிர்வலைகள் சூழலுக்கு அமைதியையும் நன்மையையும் ஏற்படுத்தும். இயற்கைச் சமநிலை பேணப்படும்போதே உலகம் அமைதியாக இயங்கும்; உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழும். இதனாலேயே எமது முன்னோர் இயற்கையைப் போற்றி வாழ்ந்தனர். நாமும் இயற்கையைப் பேணி இன்பமாய் வாழ்வோம்.

## விருந்தோம்பல்

**''செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.''**

என்கிறார் திருவள்ளுவர். விருந்து என்றால் புதிது என்று பொருளாகும். ஓம்புதல் என்றால் பேணுதல் அல்லது பாதுகாத்தல் என்பதாகும். புதிதாக வருபவரை (அதிதியை) வரவேற்று, உபசரித்து, உணவளித்தல் விருந்தோம்பல் ஆகும். பசித்தவர்களுக்கு உணவளித்தபின் மிஞ்சிய உணவைத் தாம் உண்டு வாழ்பவர்களைத் துன்பம் வந்தடைய மாட்டாது.

பசித்தோர்க்கு உணவளித்தலை சைவமரபு மேலான அறமாகப் போற்றுகிறது. கோயில்களுக்கு அண்மையிலுள்ள அன்ன சத்திரங்கள், மடங்கள் என்பன இப்பணிக்காகவே அமைக்கப்பட்டவையாகும். ஆலயங்களில் இடம்பெறும் அன்னதானமும் விருந்தோம்பும் சைவமரபையே உணர்த்துகின்றது.



ஞானசம்பந்தரும் அப்பரும் படிக்காசு பெற்று பஞ்சம் நீக்கியமை சைவசமயாசாரியர்களின் விருந்தோம்பல் பண்பினைக் காட்டுகின்றது. பெரிய புராணத்தில் இளையான்குடி மாறநாயனார், காரைக்காலம்மையார், அப்பூதியடிகள் முதலானோரின் வரலாறு விருந்தோம்பலின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது. பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசியைப் போக்குவதற்குக் கஞ்சித் தொட்டித் தருமப்பணியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மேற்கொண்டார்கள். ''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'' என்ற திருமூலர் வாக்கும் இத்தகைய தர்மத்தையே வலியுறுத்தியுள்ளது.



## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. மனித வாழ்க்கையின் நான்கு படிநிலைகளும் எவை?
2. குடும்பத்தில் பிள்ளைகளின் கடமைகள் யாவை?
3. இல்லறத்தாரின் கடமைகளாக வள்ளுவர் கூறுவன எவை?
4. தென்புலத்தார் யார்? அவர்கள் அவ்வாறு அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
5. இல்லறத்தர் செய்யும் பிதிர் வழிபாடுகளுள் மூன்றினைக் குறிப்பிடுக.
6. பிதிர்க்கடன் நிறைவேற்றும் தலங்களாகச் சிறப்புப் பெற்றவை எவை?
7. வேதகால மக்களால் வழிபடப்பட்ட இயற்கைத் தெய்வங்கள் எவை?
8. விருந்தோம்பும் தொண்டினால் மேன்மையுற்ற நாயன்மார்கள் யாவர்?

## குழுச் செயற்பாடு

திருவள்ளுவர் கூறும் 'விருந்தோம்பல்' பற்றி உரை ஒன்று நிகழ்த்துங்கள்.

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் 7



## தேவாரம் - 1

திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்தை விட்டு, மீண்டும் சைவசமயத்தைச் சார்ந்தார். அதனைப் பல்லவ மன்னன் அறிந்துகொண்டான். சமணர்களது தூண்டுதலால் திருநாவுக்கரசு நாயனாரை, ஒரு கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே தள்ளிவிடுமாறு அரசன் கட்டளையிட்டான். அரசனின் கட்டளையை ஏவலாளர்கள் நிறைவேற்றினர். அப்போது நாயனார் சிவபெருமானைத் துதித்து 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே கட்டிய கயிறு அறுந்தது; கல் தெப்பமாக மிதந்தது. 'இல்லக விளக்கது …' என்ற இத்தேவாரம், அப்பதிகத்தின் எட்டாம் பாடலாகும்.

தலம் - பொது பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இல்லக விளக்கது இருள் கெடுப்பது

சொல்லக விளக்கது சோதி உள்ளது

பல்லக விளக்கது பலரும் காண்பது

நல்லக விளக்கது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

வீட்டினுள் ஏற்றப்படும் விளக்கானது, அங்குள்ள இருளைப் போக்கவல்லது; ஞானிகளால் பேசப்பெறும் மெய்ம்மொழியானது, சிவஞானமாகிய பிரகாசத்தை உடையது; பல இடங்களிலும் தோன்றும் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் விளக்குகள் எல்லோராலும் காணத்தக்கன; உள்ளத்திற்கு ஒளியைத் தருகின்ற நல்ல விளக்காக அமைவது நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தாகும்.

## தேவாரம் - 2

திருக்குறுக்கை வீரட்டம், அட்ட வீரட்டத்தலங்களில் ஒன்று. அது சிவபெருமான், மன்மதனை எரித்த தலம் ஆகும். திருநாவுக்கரசர், திருக்குறுக்கை என்ற தலத்தை அடைந்து, அங்கு வீற்றிருக்கும் பெருமான்மேல் இரு திருப்பதிகங்கள் பாடியருளினார். முதலாவது திருப்பதிகம் இறை அடியாரது பெருமை பேசுவது. அப்பதிகத்தில் ஏழாவதாக அமைந்துள்ள இப்பாடல், கண்ணப்ப நாயனாரது தூய அன்பையும் அவருக்கு அருள்புரிந்த இறைவனின் கருணைத்திறத்தையும் எடுத்துரைக்கின்றது.

தலம் - திருக்குறுக்கை வீரட்டம்

திருச்சிற்றம்பலம்

காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப்பாரம்
தோற்பெரும் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெரும் கண்கள் செய்யக்
குருதிநீர் ஒழுக தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கை வீரட்டனாரே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

காவல் செய்வதற்குரிய வில்லும் அம்பும் ஒருகைக் கொண்டு, இறைச்சியை மறுகையில் ஏந்தியவாறு, காலில் தோற்செருப்பினை அணிந்தவாறு, தன் வாயையே தூய கலசமாகக் கொண்டு, பெருமானுக்கு அபிடேகம் செய்து பூசித்தவர் கண்ணப்பர். அத்தருணத்தில் பெருமானது திருமுகத்தில் உள்ள கண்ணி லிருந்து குருதி வர, தன் கண்ணை எடுத்து பிரானின் கண்ணுக்குப் பதிலாய் அப்புவதற்காக அம்பினால் தன் கண்ணைத் தோண்ட முற்படும்போது, அவரைத் தடுத்து நிறுத்தியவர் திருக்குறுக்கைவீரட்டானரே.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. ''இல்லக விளக்கது...'' என்ற தேவாரம் பாடப் பெற்ற சந்தர்ப்பம் யாது?
2. உள்ளத்திற்கு ஒளி தரும் விளக்கு யாது?
3. ''காப்பதோர் ...'' என்ற தேவாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள அடியார் யார்?
4. அந்த அடியார் இறைவனை எவ்வாறு வழிபட்டார்?
5. அவர் இறைவன்மீது கொண்ட அன்பின் வலிமையை எடுத்துக் காட்டும் செயல் யாது?
6. ''இல்லக விளக்கது...'', ''காப்பதோர் வில்லும்...'' தேவாரங்களை வரிக்கிரமமாக எழுதுக.

## குழுச் செயற்பாடு

தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.

# விரதங்கள்

# 8

விரதம் என்பது இறைவனை மெய்யன்போடு வழிபடும் முறைகளுள் ஒன்றாகும். அது வாழ்வை நெறிப்படுத்த உதவுகின்றது. சைவ சமயிகளாகிய நாம் பல வகையான விரதங்களை அனுஷ்டிக்கிறோம். விரதங்கள் வாரம், பட்சம், நட்சத்திரம், வருடம் என்ற அடிப்படைகளில் வகுக்கப்பட்டுள்ளன.

உதாரணம்:

வார விரதம் - வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை

பட்ச விரதம் - சதுர்த்தி, பிரதோஷம்

நட்சத்திர விரதம் - கார்த்திகை, உத்தரம், பூரம்

வருட விரதம் - மகாசிவராத்திரி, நவராத்திரி

வருடத்துக்கொருமுறை அனுஷ்டிக்கப்படும் விரதங்களான ஆடிப்பூர விரதம், ஆவணிச் சதுர்த்தி விரதம், நவராத்திரி விரதம், கேதாரகௌரி விரதம் ஆகியவை பற்றி இங்கு அறிந்துகொள்வோம்.



## ஆடிப்பூரம்

அச்சுவினி முதலான இருபத்தேழு நட்சத்திரங்களில், பூரம் பதினொராவது நட்சத்திரமாகும். சிவபெருமானுக்குத் திருவாதிரையும் திருமாலுக்கு திருவோணமும் போல அம்பிகைக்குரிய சிறப்புத் திருநாள் பூரமாகும்.

ஒரு வருடத்தை சூரியனது போக்கின் அடிப்படையில் உத்தராயணம் என்றும் தட்சணாயணம் என்றும் இரண்டாக வகுப்பதை நாம் அறிவோம். தட்சணாயணம் ஆடிமாதத்தோடு ஆரம்பமாகிறது. ஆடிமாத முதலாம் நாளில் ஆடிப்பிறப்பு கொண்டாடப்படும். ஆடி மாதத்தில் உழவர்கள் வயல்களில் உழுது விதை விதைத்து பயிர் செய்யும் முயற்சியை ஆரம்பிப்பர். இவ்வாறு பலவகையிலும் ஆடிமாதம் முக்கியத்துவம் பெறுகிறது. அத்தகைய ஆடிமாதத்தில் வருகின்ற பூர நட்சத்திரம் மிகவும் சிறப்புடையதாகும்.

ஆடிப்பூரம் அம்பிகைக்கு உகந்த தினமாகும். அன்று ஆலயங்களில் விசேட பூசைகளும் வழிபாடுகளும் இடம்பெறும். ஆண்டாள் நாச்சியார் ஆடிப் பூரத்திலேயே திருவவதாரம் செய்தார். ஆடி மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளும் விரதம் அனுஷ்டிப்பதற்கு உகந்த தினங்களாகும்.

## ஆவணிச் சதுர்த்தி

ஆவணி மாதத்துப் பூர்வ பட்ச சதுர்த்தி (வளர்பிறை 4 ஆம் திதி) விநாயகப் பெருமான் உதித்த தினமாகும். ஆகையால் விநாயகரை நினைத்து விரதம் அனுஷ்டித்து வழிபடுவதற்கு சிறந்த நாளாக இது கொள்ளப்படுகின்றது.

மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தித் திதி விநாயகர் விரதத்திற்குச் சிறந்த நாளாகும். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் அனுஷ்டிக்கப்படும் விநாயகர் சதுர்த்தி விரதம் நமக்கு நற்பலன்களை நல்கும். பகலில் உபவாசம் இருந்து, ஆலய தரிசனம் செய்து, விநாயகரைப் போற்றும் தோத்திரப் பாக்களைப் பாராயணம் செய்வர். இரவில் கொழுக்கட்டை, மோதகம் முதலியவற்றை விநாயகருக்கு நிவேதனம் செய்வர். இந்த விரத நாளில் விநாயகரை அறுகம்புல்லால் அர்ச்சிப்பது சிறந்த பலனைக் கொடுக்கும். தேய்பிறையில் வரும் சதுர்த்தி சங்கடகர சதுர்த்தி என்று அழைக்கப்படும்.

## நவராத்திரி விரதம்

சக்தியை நோக்கி அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் நவராத்திரியும் ஒன்றாகும். நவ என்றால் ஒன்பது என்பது பொருள். ஒன்பது இரவுகள் அனுஷ்டிக்கப்படுவதால் இது நவராத்திரி எனப்படுகிறது.

புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்துவரும் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாட்களும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். அந்த ஒன்பது நாட்களிலும் சக்தியை துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய மூன்று நிலைகளில் வழிபடுவர். துர்க்கை வீரத்திற்கும் இலக்குமி செல்வத்திற்கும் சரஸ்வதி கல்விக்கும் அதிபதிகள் ஆவர். முதல் மூன்று தினங்கள் துர்க்கைக்கும் அடுத்த மூன்று தினங்கள் இலக்குமிக்கும் இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதிக்கும் உரியனவாகக் கொள்ளப்படுகின்றன. நவராத்திரி காலத்தில் வீடு, கோயில், பாடசாலை முதலான இடங்களில் சக்தியை, கும்பத்தில் எழுந்தருளப் பண்ணி, கொலுவைத்து, தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபடுவர்.

நவராத்திரி முடிந்த அடுத்த நாளான தசமி திதியில் கோயில்களில் மானம்பூ உற்சவம் இடம்பெறும். அது விஜயதசமி எனப்படும். ஜயம் என்றால் வெற்றி என்பது பொருள்; விஜயம் என்பது மேலான வெற்றி என்று பொருள்படுகிறது. மகிஷன் என்ற கொடிய அசுரனை அம்பிகை அழித்து வெற்றி கொண்டதன் அடையாளமாக, அன்றைய தினம் கோயில்களில் வாழைவெட்டு இடம்பெறும். பாடசாலைகளிலும் கோயில்களிலும் விஜயதசமி அன்று வித்தியாரம்பம் செய்துவைக்கப்படும். விஜயதசமியில் ஆரம்பிக்கப்படும் நற்கருமங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். நவராத்திரியும் தசமியும் சேர்ந்த பத்து தினங்கள், இந்தியாவில் மைசூர் முதலான பிரதேசங்களில் தசரா என்ற பெயரில் பெரும் பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றன. தசரா என்றால் பத்து இரவு என்று பொருள்படும்.

## கேதாரகௌரி விரதம்



இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை நவமி முதல் ஐப்பசி மாதத்து அமாவாசை வரை இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படுகிறது. கௌதம முனிவரின் ஆலோசனைப்படி கேதாரத்து நாயகியான உமாதேவியார், கேதாரநாதரிடம், அர்த்தநாரீஸ்வரப் பேற்றினைப் பெறுவதற்கு அனுஷ்டித்த விரதமாகையால் இது கேதாரகௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது. திருமணம் முடித்த பெண்கள் தமது மாங்கல்ய பாக்கியம் நிலைக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் தமக்குச் சிறப்பான மாங்கல்ய வாழ்வு வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பர்.

கேதாரகௌரி விரத காலத்தில் சிவபெருமானுக்குத் தினந்தோறும் வில்வத்தால் அர்ச்சனை செய்வர். இவ்விரதத்தில் திருக்காப்பு கட்டும் நிகழ்வு முக்கிய இடம் பெறுகிறது. இருபத்தொரு இழையினாலான சிவப்புப் பட்டு நூலில் தினத்துக்கு ஒரு முடிச்சாக இருபத்தொரு முடிச்சுகள் இடப்படும். இருபத்தோராம் நாள் பூசையின் போது சிவகும்பத்தில் அதனைச்சாத்தி இருபத்தொரு எண்ணிக்கையில் வெற்றிலை, பாக்கு, பழம், அதிரசம், வெல்லம், முதலான பொருள்களை நிவேதனம் செய்து வழிபடுவர். விரத இறுதியில் அந்நூலினைத் தரித்துக் கொள்வர். இருபத்திரண்டாம் நாள் பாரணை பண்ணி விரதத்தை நிறைவு செய்வர்.

சைவசமயிகள் விரதகாலங்களில் பரிசுத்தமாயிருத்தல், பசித்திருத்தல், பொறுத்திருத்தல், பொய் பொறாமை தவிர்த்திருத்தல், விழித்திருத்தல், வீண் வார்த்தைகள் விடுத்து இறைசிந்தனையில் லயித்திருத்தல் என்பவற்றின் மூலம் பூரண விரத பலனைப் பெறமுடியும். உடல், உள, ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் இறை நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கும் விரதங்கள் வழிவகுக்கின்றன.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. விரதங்கள் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளன?
2. ஆடிப்பூரம் யாரை நோக்கி அனுஷ்டிக்கப்படுகிறது?
3. சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு யாது?
4. நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படும் கால எல்லை யாது?
5. விஜயதசமி என்ற சொல்லின் பொருளைத் தருக.
6. கேதாரகௌரி விரதம் யாரை நோக்கி அனுஷ்டிக்கப்படுகிறது?

## குழுச் செயற்பாடு

கேதாரகௌரி விரதம் தொடர்பான கதையை அறிந்து எழுதுங்கள்.

# ஆடிப்பிறப்பு

9



ஆடிப்பிறப்பு என்பது ஆடி மாதத்தின் பிறப்பைக் கொண்டாடுகிற ஒரு பண்டிகை ஆகும். தை மாதப் பிறப்பின்போது நாம் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறோம் அல்லவா? அது போலவே ஆடிமாதப் பிறப்பில் ஆடிப் பிறப்பைக் கொண்டாடுகிறோம்.

ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் உள்ளன. ஏனைய மாதங்கள் பிறப்பதையும் இவ்வாறு கொண்டாடுகிறோமா? இல்லை. அவ்வாறாயின் இந்த இரண்டு மாதங்களுக்கு மாத்திரம் என்ன முக்கியத்துவம் உள்ளது?

நாம் வாழும் இந்தப் பூமியானது, சாய்வான ஒரு அச்சில் தானும் சுழன்றபடியே, நீள்வட்டப் பாதை ஒன்றில் சூரியனையும் சுற்றி வருகிறது. எனினும் பூமியில் வாழும் நமக்கு சூரியன் நகர்வதாகவே தென்படுகிறது. அந்த நகர்ச்சியானது உத்தராயணம், தட்சணாயணம் என்னும் இருவகையில் அமைகிறது.

உத்தராயணம் என்பது, தான் உதயமான இடத்திலிருந்து சிறிதுசிறிதாக வடக்குநோக்கி நகர்ந்து மறைவதான சூரியனின் போக்கைக் குறிக்கும். அப்படியான போக்கில் சூரியன் நகரும் காலப்பகுதி உத்தராயண காலம் எனப்படும்.

தட்சணாயணம் என்பது, உதயமான சூரியன் தெற்குநோக்கி நகர்ந்து சென்று மறைகின்ற போக்கைச் சுட்டுகிறது. அவ்வாறான போக்கில் சூரியனது நகர்ச்சி நடைபெறும் காலப்பகுதி தட்சணாயண காலம் எனப்படும்.

நமது புராண மரபின்படி பூமியில் ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். அவ்வகையில் பூமியின் உத்தராயண காலம் தேவர்களுக்குப் பகல்; தட்சணாயன காலம் இரவு.

உத்தராயண காலம் தைமாதம் முதல்நாள் ஆரம்பமாகி ஆனி மாத நிறைவில் முடிகிறது; தட்சணாயன காலம் ஆடிமாதம் முதல்நாள் ஆரம்பமாகி மார்கழி மாதத்தின் நிறைவோடு முடிகிறது.



இராசிகள் பன்னிரண்டு என்பதையும் ஒவ்வொரு இராசியும் ஒவ்வொரு மாதத்துக்கு உரியது என்பதையும் நாம் அறிவோம். உத்தராயன காலத்தில் சூரியன் மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம் என்னும் ஆறு இராசிகளில் பயணம் செய்கிறான்; தட்சணாயன காலத்தில் கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு ஆகிய ஆறு இராசிகளில் பயணம் செய்கிறான். தை முதலிய

மாதங்கள் மகரமாதம், கும்பமாதம் என்றவாறாக அவற்றுக்குரிய இராசிகளின் பெயரால் சுட்டப்பெறுவதும் இங்கு அறியத்தக்கதே. உத்தராயண காலத்தின் தொடக்கத்தையே நாம் தைப்பொங்கல் நாளாகக் கொண்டாடுகிறோம். அது சூரியன், மகர ராசியிற் பிரவேசிக்கும் நாளாக அமைவதால் அந்நாளை மகரசங்கிராந்தி என்றும் கூறுவர். மகரசங்கிராந்தி என்றால் மகர மாதப் பிறப்பு என்பது பொருள்.

உத்தராயண ஆரம்பத்தை பொங்கற் பண்டிகையாகக் கொண்டாடும் நாம், தட்சணாயன ஆரம்பத்தை ஆடிப்பிறப்பு என்று கொண்டாடுகிறோம். ஆடிப்பிறப்பை கடக சங்கிராந்தி என்றும் கூறலாம். தைமாதம் பிறக்கும்போது சூரியனுக்குப் பொங்கிப் படையல் செய்து வழிபடுகிறோம். ஆடிப்பிறப்பன்று கூழ், கொழுக்கட்டை முதலானவற்றைச் செய்து தேவர்களுக்கும் பிதிர்களுக்கும் படைத்து வழிபடுகிறோம்; உறவுகளோடு கூடியிருந்து உண்டு மகிழ்கிறோம்.

ஆடிப்பிறப்பு நமது நாட்டில் விசேடமாகக் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை. அந்நாளில் பாடசாலைகளுக்கு விடுமுறை கூட வழங்கப்பட்டிருந்தது. தங்கத்தாத்தா எனப் போற்றப் பெறும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்,

**''ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே**
**கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே''**

என்று பாடியதை நாம் அறிவோம் அல்லவா? பண்டிகைகள் உறவுகளை ஒன்று சேர்ப்பன; மன நிறைவைத் தருவன. அவற்றைத் தவறாது கொண்டாடுவோம். எங்கள் மரபுகளைப் பேணுவோம்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. எவ்வெவ் மாதங்களின் முதல் நாள் பண்டிகைகளாகக் கொண்டாடப்படுகின்றன?
2. உத்தராயணம் என்றால் என்ன? இதன் கால எல்லை யாது?
3. தட்சணாயணம் என்றால் என்ன? இதன் காலஎல்லை யாது?
4. ஆடிப்பிறப்பை நாம் எவ்வாறு கொண்டாடுகின்றோம்?
5. பண்டிகைகள் கொண்டாடப்படுவதன் நோக்கம் யாது?

## குழுச் செயற்பாடு

1. பன்னிரு மாதங்களையும் அவற்றுக்குரிய இராசிகளையும் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

2. தைப்பொங்கலும் ஆடிப்பிறப்பும் எந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை விளக்கும் சுவரொட்டி ஒன்றைத் தயாரியுங்கள்.

# நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 10

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துநின் பவளவாய் காண்பேனே.

- குலசேகர ஆழ்வார்

சைவ மரபில், சிவனடியார்களால் அருளப்பட்ட தேவாரம், திருவாசகம் முதலான அருட்பாக்களின் தொகுப்பு 'திருமுறை' எனப்படுவதுபோல, வைணவ மரபில் திருமால் அடியார்களான ஆழ்வார்களால் அருளப்பட்ட திருப்பாடல்களின் தொகுப்பு 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' எனப்படும்.



திவ்வியம் என்றால் தெய்வத்தன்மை என்று பொருள். பிரபந்தம் என்றால் நன்கு கட்டப்பட்டது என்று பொருள். நன்கு கட்டமைக்கப்பட்ட இலக்கியங்களைக் குறிப்பதாக அச்சொல் வழங்குகின்றது. நாலாயிரம் எண்ணிக்கை உடைய, தெய்வத்தன்மை வாய்ந்த, பாடல்களின் தொகுப்பு என்ற பொருளிலேயே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற தொடர் அமையப் பெறுகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் அடங்கும் பாடல்கள், ஆழ்வார் பெருமக்கள் திருமாலிடம் கொண்ட பக்தியின் வெளிப்பாடாய் அமைவன; மெய்ஞ்ஞானம் பயப்பன. அதனால் வைணவர்கள் அவற்றை வேதங்களுக்கு நிகரானவையாக - திராவிட வேதம் (தமிழ்வேதம்) - என்று போற்றுகிறார்கள்.

சைவத் திருமுறையை நம்பியாண்டார் நம்பி தொகுத்தது போல, நாதமுனி என்பவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தார்.

சைவத் திருமுறையுள் அடங்கும் திருப்பாடல்கள் இருபத்தேழு சிவனடியார்களால் அருளப்பட்டன. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் அடங்கும் அருட்பாடல்களை அருளிய ஆழ்வார்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். திருமாலின் திவ்விய குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களாதலால் அத் திருமாலடியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டார்கள்.

ஆழ்வார்கள் பன்னிருவருள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னும் மூவரும் முதலாழ்வார் எனப்படுவர். அவர்கள் ஏனைய ஆழ்வார்களைவிடக் காலத்தால் முற்பட்டவர்கள்.

திருப்பாணாழ்வார் பாணர் குலத்தவர்; உண்மையான இறைபக்தியால், முனிவர்களாலும் தொழப்பெறும் நிலைக்கு உயர்ந்தவர்.

திருமழிசையாழ்வார் திருமழிசை என்னும் தலத்தில் பிறந்தவர்; பேயாழ் வாரின் சீடராகி திருமால் புகழ் பாடியவர்.

பெரியாழ்வார் வேதியர் குலத்தவராய் உதித்து திருமாலுக்குப் பூமாலையும் பாமாலையும் சூட்டுவதைத் தன் திருப்பணிகளாய்க் கொண்டொழுகியவர்.

பெரியாழ்வாரது வளர்ப்பு மகளான ஆண்டாள் நாச்சியார், திருமால்மேல் கொண்ட தன் தீராக் காதலை தீந்தமிழ்ப் பாக்களால் வெளிப்படுத்தியவர்; 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' எனப் போற்றப் பெறுபவர்.

திருமங்கையாழ்வார், சோழதேசத்துள் அடங்கிய ஆலிநாடு என்னும் குறுநிலத்தின் மன்னராய் விளங்கியவர்; தம் கவித்திறத்தால் 'நாலுகவிப் பெருமாள்' என்று புகழ்ந்துரைக்கப் பெறுபவர்.

தொண்டரடிப்பொடியாழ்வார், தொண்டர்தம் அடி பணிவதையே மேலான வழிபாடாகக் கொண்டொழுகியவர்.

குலசேகராழ்வார் சேர அரசர் குலத்தில் உதித்தவர்; இராமபிரானிடத்தில் ஆராக்காதல் கொண்டு அருட்பாக்களைப் பாடியவர்.

ஆழ்வார்களுள் மிகுந்த மதிப்புப் பெறுபவர் நம்மாழ்வார் ஆவார். திருமாலின் மிகுந்த விருப்பத்துக்கு உரியவராதலால் அவர் நம்மாழ்வார் எனப்பட்டார். ஏனைய ஆழ்வார்கள் யாவரும் அவயவங்களாக, இவர் அவயவியாகவும் போற்றப்பெறுகிறார். அதாவது ஏனைய பதினொரு ஆழ்வார்கள் உடலாக, நம்மாழ்வார் அந்த உடலின் உள்நின்று இயக்கும் உயிராகக் கருதப்படுகிறார்.

மதுரகவியாழ்வார், அத்தகைய நம்மாழ்வாரையே திருமாலாகக் கருதிப் பாடிப் பரவியவர்.

இத்தகு ஆழ்வார்கள் பாடியருளிய திருப்பாடல்களை 'அருளிச் செயல்கள்' என்று போற்றுவது வைணவ மரபு.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் தொகுப்பானது, நான்கு பகுதிகளாக - ஆயிரங்களாக - வகைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப்பகுதிகள் முறையே முதலாயிரம், இரண்டாம் ஆயிரம், மூன்றாம் ஆயிரம், நான்காம் ஆயிரம் எனச் சுட்டப்பெறுகின்றன.

## முதலாயிரம் (10 பிரபந்தம்)

| | நூற் பெயர் | பாடியோர் பெயர் |
|---|---|---|
| 01 | திருப்பல்லாண்டு | பெரியாழ்வார் |
| 02 | பெரியாழ்வார் திருமொழி | |
| 03 | திருப்பாவை | ஆண்டாள் |
| 04 | நாச்சியார் திருமொழி | |
| 05 | பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் |
| 06 | திருச்சந்த விருத்தம் | திருமழிசையாழ்வார் |
| 07 | திருமாலை | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| 08 | திருப்பள்ளியெழுச்சி | |
| 09 | அமலனாதிபிரான் | திருப்பாணாழ்வார் |
| 10 | கண்ணி நுண் சிறுதாம்பு | மதுரகவியாழ்வார் |

## இரண்டாம் ஆயிரம் - பெரியதிருமொழி (3 பிரபந்தம்)

| | நூற் பெயர் | பாடியோர் பெயர் |
|---|---|---|
| 01 | பெரியதிருமொழி | திருமங்கையாழ்வார் |
| 02 | திருக்குறுந்தாண்டகம் | |
| 03 | திருநெடுந்தாண்டகம் | |

## மூன்றாம் ஆயிரம் - (10 பிரபந்தம்)

| | நூற் பெயர் | பாடியோர் பெயர் |
|---|---|---|
| 01 | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| 02 | இரண்டாம் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| 03 | மூன்றாம் திருவந்தாதி | பேயாழ்வார் |
| 04 | நான்முகன் திருவந்தாதி | திருமழிசையாழ்வார் |
| 05 | திருவிருத்தம் | நம்மாழ்வார் |
| 06 | திருவாசிரியம் | நம்மாழ்வார் |
| 07 | பெரியதிருவந்தாதி | நம்மாழ்வார் |
| 08 | திருவெழுகூற்றிருக்கை | திருமங்கையாழ்வார் |
| 09 | சிறியதிருமடல் | திருமங்கையாழ்வார் |
| 10 | பெரியதிருமடல் | திருமங்கையாழ்வார் |

## நான்காம் ஆயிரம் - (ஒரே பிரபந்தம்)

| | நூற் பெயர் | பாடியோர் பெயர் |
|---|---|---|
| 01 | திருவாய்மொழி | நம்மாழ்வார் |

நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் ஆழ்வார்களின் பிரபந்தங்கள் அவர்களது காலவரிசைப்படி அமையப்பெறவில்லை. பெரியாழ்வாரின் திருப்பல்லாண்டுடன் தொடங்கி நம்மாழ்வாரின் திருவாய்மொழியோடு நிறைவுறுகின்றமை அவதானிக் கத்தக்கது.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற தொடரின் பொருள் யாது?
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலுள்ள பாசுரங்களை அருளிய ஆழ்வார்கள் எத்தனை பேர்? இவற்றைத் தொகுத்தவர் யார்?
3. முதலாழ்வார்கள் என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?
4. நம்மாழ்வரின் சிறப்பு யாது?
5. நம்மாழ்வாரைத் தெய்வமாகக் கருதிப் பாடிய ஆழ்வார் யார்?

## குழுச் செயற்பாடு

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இருந்து விரும்பிய மூன்று பாசுரங்களைத் தெரிந்து காட்சிப்படுத்துங்கள்.

# மங்கையர்க்கரசியார் 11



சைவசமயத்தின் வளர்ச்சிக்காக அருந்தொண்டாற்றியவர்கள் பலர். அவர்களுட் பெரும்பாலானவர்கள் ஆண்களாயினும் பெண்களும் அவர்களது பணிகளுக்கு உறுதுணை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் சில பெண்ணடியார்கள் மிகுந்த ஆளுமையோடு முன்னணியில் நின்று பணியாற்றினர். காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் முதலானவர்கள் அத்தகையவர்கள். காரைக் காலம்மையார் பதிகம்பாடும் மரபின் முன்னோடி என்று போற்றப்படுகின்றார். சமணசமயம் சார்ந்த மருணீக்கியாரை மீளவும் சைவ மார்க்கத்துக்குக் கொண்டு வருவதில் முன்னின்றுழைத்தவர் திலகவதியார். அவர் இல்லையேல் நாவுக்கரசர் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு அவரது பணி முக்கியத்துவம் வாய்ந்தது. அவ்வாறே சைவம் நலிந்த நிலையில் இருந்த தமிழ் நாட்டில் மீளவும் வேதநெறி தழைக்தோங்க, மிகு சைவத்துறை விளங்க யாது செய்ய வேண்டும் என அறிந்து அரும்பணியாற்றியவர் மங்கையர்க்கரசியார். அவரது வரலாற்றையும் ஆளுமையையும் அறிந்து கொள்வோம்.

சோழவள நாட்டிலே மணிமுடிச் சோழன் அரசாண்டு வந்தான். அவன் சிறந்த சிவபக்தன். அவன் செய்த புண்ணியத்தின் பயனால் மங்கையர்க்கரசியார் அவனுக்கு மகளாகப் பிறந்தார். மங்கையர்க்கரசியார் இளமையிலேயே சகல கலைகளையும் கற்று அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினார். அவரை, பாண்டியன் நெடுமாறனுக்கு மணம் முடித்து வைத்தனர். நெடுமாறனிடம் இருந்த கூன் காரணமாக அவன் கூன்பாண்டியன் எனவும் அழைக்கப்பட்டான்.

மங்கையர்க்கரசியார் 'மானி' என்றும் அழைக்கப்பெற்றார். வீரம், மானம் மிக்க சோழமன்னர்களுக்குரிய சிறப்புப் பெயராக விளங்கிய மானி என்ற பெயரினால் சோழமன்னனது மகளான மங்கயர்க்கரசியாரும் அழைக்கப்பெற்றார். ஞானசம்பந்தப் பெருமான் அவரை 'வரிவளைக்கை மடமானி' என்று போற்றுவார். சேக்கிழார் பெருமான் 'மங்கையர்க்குத் தனி அரசி' என்று ஏத்துவார். அம்மையார் சிவ பக்தியிலும் அடியார் பக்தியிலும் சிறந்தவர்.

நெடுமாறனது ஆட்சிக் காலத்தில் பாண்டி நாட்டில் சமண சமயமே செல்வாக்குப் பெற்றிருந்தது. பிரசாரத்தில் வல்ல சமணகுருமாரின் போதனையால் மன்னன் நெடுமாறனும் சமண சமயம் சார்ந்து விட்டான். மன்னன் வழியில் குடிமக்களும் சமணசமயத்தைத் தழுவத் தொடங்கினர்.

சைவசமயத்தின் வீழ்ச்சி கண்டு பாண்டிமாதேவியார் கலங்கினார். பாண்டிமாதேவி போலவே சைவத்தின்மேல் பற்றுறுதி மிக்கவரான அமைச்சர் குலச்சி றையாரும் கலங்கினார்.

அக்காலத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் வேதாரணியத்தில் எழுந்தருளி இருப்பதை அவர்கள் கேள்வியுற்றனர். அது அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஞானசம்பந்தர் என்கின்ற ஞானஞாயிறு பாண்டி நாட்டிற்கு எழுந்தருளினால் சமணசமயம் ஆகிய காரிருள் அகன்று ஓடிவிடும் என்பது அவர்களது அசையாத நம்பிக்கை. மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தப் பெருமானை அங்கு அழைத்து

வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்தார். குலச்சிறையார் ஞானசம்பந்தரையும் பரிசனங்களையும் சகல மரியாதையோடும் பாண்டி நாட்டுக்கு அழைத்து வந்தார். ஞானசம்பந்தர் சமணர்களுடைய சூழ்ச்சிகளை எல்லாம் முறியடித்தார்; சமணர்களை வாதிலே வென்றார்; பாண்டியனைச் சைவனாக்கினார்; சைவசமயத்தை பாண்டி நாட்டில் தாபித்தருளினார்.

இவை எல்லாம் நிகழ்ந்ததற்கு மூலகாரணமாக மங்கையர்க்கரசியாரே இருந்தார். மங்கையர்க்கரசியாரது அரும் பணியை ஞானசம்பத்தப் பெருமான் தமது தேவாரப்பதிகங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

மங்கையர்க்கரசியாரைக் காண்பதற்கு முன்பே, தம்மை வரவேற்க வந்த குலச்சிறையார் கூறியவற்றைக் கொண்டே சம்பந்தப் பெருமான் அவருடைய பெருமையை உணர்ந்து கொண்டார். திருவாலவாய்த் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனைப் பாடும்போது மங்கையர்க்கரசியாரையும் சிறப்பித்துப் பாடினார்:

தலம் - திருவாலவாய் பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

**மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி**

**பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணி செய்து நாள்தொறும் பரவ**

**பொங்கழல் உருவன் பூதநாயகன் நால் வேதமும் பொருள்களும் அருளி**

**அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் ஆவதும் இதுவே.**

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டுத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டபோது பாண்டிய மன்னனும் மங்கையர்க்கரசியாரும் இராமேஸ்வரம் வரை கூடவே சென்றனர். மங்கையர்க்கரசியார், திருநாவுக்கரசு சுவாமிகள் பாண்டி நாட்டுக்கு வந்தபோது அவரை வரவேற்று உபசரிக்கும் பேற்றையும் பெற்றார்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. சைவசமய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய பெண்ணடியார்கள் யாவர்?
2. பாண்டி நாட்டில் சைவ சமயம் வீழ்ச்சியுற்றமைக்கு காரணம் யாது?
3. பாண்டிய நாட்டில் சமண சமயம் நிலவிய போது ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்த இடம் எது?
4. மங்கையர்க்கரசியாரை சம்பந்தப்பெருமான் எவ்வாறு போற்றுகின்றார்?
5. அவரை சேக்கிழார் பெருமான் எவ்வாறு போற்றுகின்றார்?
6. பாண்டிநாட்டில் ஞானசம்பந்தர் சைவசமயத்தை மீண்டும் எவ்வாறு தாபித்தார்?
7. மங்கையர்க்கரசியாரின் ஆளுமை எவ்வாறு புலனாகின்றது?

## குழுச் செயற்பாடு

காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகியோரின் சமயப்பற்றுறுதி பற்றிக் கலந்துரையாடுங்கள்.

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் 12



## தேவாரம் - 1

சுந்தரமூர்த்தி நாயனார், திருவொற்றியூரில் வாழ்ந்து வந்தார். அவ்வேளை, அவருக்குத் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானது வசந்தவிழா நினைவுக்கு வந்தது. வீதிவிடங்கப்பெருமானை நினைந்து பதிகம் பாடினார். ''பத்திமையும் அடிமையும்...'' எனத் தொடங்கும் அத்திருவாரூர்த் திருப்பதிகத்தின், பத்தாவது பாடலே இது:

தலம் : திருவாரூர் பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாலை ஒண்கண் பரவையைத் தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

ஏழு சுரங்களால் அமையப்பெற்ற இசையாகவும் அந்த இசையின் பயனாகவும் இனிமைமிக்க அமுதாகவும் எனக்கு உரிமையுடைய தோழனாகவும் விளங்கி, யான்செய்யும் குறும்புகளுக்கெல்லாம் உடன்பட்டு நின்று, அழகிய ஒளி பொருந்திய கண்களையுடைய பரவையை எனது மனையாளாக்கித்தந்து என்னை ஆட்கொண்டருளிய திருவாரூர்ப் பெருமானை விட்டு அறிவில்லாத ஏழையாகிய யான் பிரிந்திருக்கின்றேனே!

## தேவாரம் - 2

சுந்தரமூர்த்திநாயனார் பல தலங்களையும் தரிசித்தபின், காவிரியாற்றின் தென்கரை சார்ந்த கறையூரிலுள்ள திருப்பாண்டிக்கொடுமுடி என்னுந் திருக்கோயிலை வந்தடைந்தார். அங்கே பண்மொழியம்மையாரோடு எழுந்தருளிருக்கும் கொடு முடிநாதரை வீழ்ந்து வணங்கி எழுந்தார். இறைவனை மறக்கவொண்ணா மனத்தினராய் பாடல்தோறும் திருவைந்தெழுத்து அமைந்த திருப்பதிகம் ஒன்றைப் பாடியருளினார். அதனால் அது ‘நமசிவாயத் திருப்பதிகம்’ என்று போற்றப்படுகிறது. அப்பதிகத்தின் முதற் பாடல் வருமாறு:

தலம் : திருப்பாண்டிக்கொடுமுடி　　　　பண் : பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

கற்றவர்கள் தொழுது வணங்குகின்ற சிறப்புடைய கறையூரில், திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நல்ல தவவடிவினனே, நான் வேறு எந்தப் பற்றும் அற்றவனாய் உனது திருவடியையே மனத்தில் பற்றிக்கொண்டேன். அத்தகைய பேற்றோடு இப்பிறவியைப் பெற்ற யான், மீண்டும் பிறவாத நிலையை எய்தப்பெற்றேன். நான் உன்னை ஒருவேளை மறந்தாலும் என்னுடைய நாவானது நமசிவாய என்னும் உனது திருநாமத்தை மறவாது சொல்லும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. திருவாரூரில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் யாது?
2. சுந்தரருக்கும் இறைவனுக்குமான உறவை 'ஏழிசையாய்...' என்ற பாடல் எவ்வாறு வெளிப்படுத்துகிறது?
3. 'ஏழிசையாய்...' என்ற தேவாரப் பாடல் பாடப்பெற்ற சந்தர்ப்பம் யாது?
4. திருப்பாண்டிக் கொடுமுடியில் வீற்றிருக்கும் இறைவன், இறைவி யாவர்?
5. 'மற்றுப்பற்று' என்ற தேவாரத்தில் சுந்தரர் இறைவனிடம் கொண்ட அன்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

## குழுச் செயற்பாடு

தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.

# அன்பு வழி

# 13

இறைவன் அன்பே உருவானவர். 'அன்பே சிவம்' என்கிறது திருமந்திரம். இறைவனை நாம் அன்போடு வழிபட்டால் இறைவனின் அன்பும் அருளும் நமக்குக் கிட்டும் அல்லவா? இறைவனை அன்போடு - பக்தியோடு - வழிபடும் வழிகளை நம்முன்னோர் நமக்கு உணர்த்திச் சென்றுள்ளனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன அவற்றுள் முதன்மையானவை. அவற்றை சைவநாற்பாதங்கள் என்றும் அழைப்போம். அவை, உடலும் உள்ளமும் பக்குவப்பட்டுப் பரம்பொருளை அடையச் செய்யும் வழிகளாக அமைகின்றன. அரும்பு, மலர், காய், கனி என்ற படிமுறை வளர்ச்சி நிலையில் அவை அமைந்துள்ளன. சரியை ஆகிய அரும்பு ஒருநாள் கிரியை ஆகிய மலர் ஆகும். அம் மலர் யோகமெனும் காயாகும். பின்னர் அந்தக் காய் கனிந்து ஞானமாகும்.



திருநாவுக்கரசர்

## சரியை

சரியை என்ற சொல் சரித்தல் என்பதிலிருந்து வந்தது. சரித்தல் என்பதற்குச் சஞ்சரித்தல், அனுட்டித்தல், நடத்தல் என்றெல்லாம் பொருள் உண்டு. உடம்பாற் செய்யப்படும் எல்லா விதமான தொண்டுகளும் சரியையின் பாற்படும். கோயிலையும் சூழலையும் சுத்தம் செய்தல், திருவிளக்கேற்றுதல், நந்தவனம் அமைத்தல், பூசைக்கு மலர் பறித்தல், பூமாலை கட்டுதல், கோயிலையும் சுவாமியையும் அலங்கரித்தல், இறை புகழ் பாடல், பூசைக்கு உதவுதல் முதலானவை சரியைத் தொண்டுகள் எனப்படுகின்றன. இவை மாத்திரமன்றி பெரியோர்களுக்குச் சேவை செய்தல், துன்பப்பட்டவரின் துயர் தீர்த்தல் முதலானவையும் சரியைத் தொண்டுகளே.

இறைவனை ஆண்டானாக நினைத்து, தன்னை அடிமையாக - தாசனாக - பாவித்துச் செய்யும் இச்சரியைத் தொண்டு தாசமார்க்கம் எனப்படும்.

திருநாவுக்கரசு நாயனார், திலகவதியார், நமிநந்தியடிகள், குங்கிலயக்கலயர், தண்டியடிகள் முதலானோர் சரியைநெறிநின்று இறையருள் பெற்றவர்கள். இத்தகைய தொண்டுகளின் மூலம் உடலும் உள்ளமும் பண்படுகின்றன; இறையருள் கிட்டுகின்றது.

எளியநல் தீபமிடல் மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அது தூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ்சனம் ஆதி
தளிதொழில் செய்வதுதான் தாச மார்க்கமே.

- திருமந்திரம்

## கிரியை


திருஞானசம்பந்தர்

கிரியை என்பது விதிப்படி செய்யும் சிவபூசையாகும். வாசனையுள்ள புதிய மலர்கள், தூபம், தீபம், அபிடேகத் திரவியங்கள், திருவமுது முதலியன இதற்கு உபகரணங்கள். பூசை செய்யும் இடம், பூசைத் திரவியங்கள் முதலியவற்றை மந்திர செபத்தால் புனிதப்படுத்தி, இறைவனை அவ்விடத்தில் எழுந்தருளச் செய்து, மனம், மொழி, மெய்களால் பக்தி சிரத்தையுடன் செய்யும் வழிபாடு கிரியை ஆகும்.

அறிவு நூல்களைக் கற்றல், திருமுறைகளை ஓதல், செபஞ்செய்தல், விரதம் அனுட்டித்தல் முதலானவையும் கிரியை நெறியிலே நிற்பவனை

பண்படுத்துவனவாகும். கிரியை நெறியில் இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையேயுள்ள உறவு, தந்தை - மகன் உறவு போன்றது. அதனால் கிரியைநெறியை சற்புத்திரமார்க்கம் என்றும் அழைப்பர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சண்டேசுரநாயனார், பூசலார் நாயனார் முதலானோர் கிரியை நெறிநின்று வழிபட்டவர்கள்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட்டு அன்னமு நீசுத்தி செய்தல்மற்று
ஆசற்ற சற்புத்திர மார்க்கம் ஆகுமே.

- திருமந்திரம்

## யோகம்


சுந்தரர்

இறைவனை அடைவதற்குரிய வழிகளுள் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவது யோகம் ஆகும். இறைவனைத் தோழனாகக் கொண்டு பக்தி செய்யும் நெறி இது. அதனால் சகமார்க்கம் என்றும் இதனைக் குறிப்பிடுவர். யோகம் என்றால் இணைதல் என்று பொருள்படும். ஆன்மா இறைவனோடு சேர்வதை இச்சொல் குறித்து நிற்கிறது. யோகம் எட்டு அங்கங்களை உடையது. அதனால் இதனை அட்டாங்க யோகம் என்பர். எட்டு அங்கங்களாவன:

1. இயமம் - தீயவற்றை விலக்கல்
2. நியமம் - நற்காரியங்களைச் செய்தல்
3. ஆசனம் - அமரும் நிலை

4. பிராணாயாமம் - மூச்சைக் கட்டுப்படுத்தல்

5. பிரத்தியாகாரம் - புலன்களையும் மனத்தையும் உலகியலிற் செல்லவிடாது தடுத்தல்.

6. தாரணை - மனத்தைக் கடவுள்பாற் செலுத்துதல்

7. தியானம் - மனத்தை இறைநினைவில் நிறுத்துதல் - நீள நினைதல்.

8. சமாதி - ஆன்மிக அனுபவம் - இறை நினைவில் ஒன்றுதல்

யோகத்தின் இந்த எட்டு அங்கங்களில் இயமம், நியமம் ஆகிய முதலிரண்டும் நாமெல்லாம் இளமையிலிருந்தே கைக்கொள்ள வேண்டிய அறப் பயிற்சிகளாகும். ஆசனம், பிரணாயாமம் என்னும் இரண்டும் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய பயிற்சிகளாகும். இப்பயிற்சிகளின் பயனாக பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன படிப்படியாகக் கைகூடும்.

சுந்தரமூர்த்திநாயனார், சேரமான் பெருமாள் நாயனார் முதலானோர் இந்நெறிநின்று இறையருள் பெற்றனர்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவனாமே.

- திருமந்திரம்

## ஞானம்



மாணிக்கவாசகர்

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று சாதனைகளும் கைவரப்பெற்ற ஒருவர் ஞான சாதனைக்கு உரியவராகிறார். ஞான மார்க்கத்தைச் சன்மார்க்கம் என்றும் குறிப்பிடுவர். இறைவனைக் குருவாக ஏத்தி, அருளுபதேசம் பெற்று, கோபம் முதலிய குற்றங்கடிந்து, ஞானப் பெருநிலையை அடைந்த ஞானிகளின் மார்க்கம் இது. மாணிக்கவாசக சுவாமிகள் ஞானநெறிநின்று முத்தியடைந்தார்.

தெரிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூட
குருபக்தி செய்யும் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே.

- திருமந்திரம்

இந்நாற்பாதங்களிலும் குருவழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம (அடியார்) வழிபாடு, சிவசின்னங்களைப் போற்றுதல் என்பன மிக முக்கியமானவை. இந்த நால்வகை மார்க்கங்களிலும் முறையாக நின்று இறைவனை அன்புடன் வழிபடுவதனால் இறையருள் கிட்டும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. சரியைத் தொண்டுகள் மூன்று கூறுக.
2. தாசமார்க்கம் என்றால் என்ன?
3. கிரியை வழிபாடுகள் மூன்று கூறுக.
4. சற்புத்திர மார்க்கம் என்றால் என்ன?
5. யோகம் என்றால் என்ன? அதன் படிமுறைகள் யாவை?
6. சக மார்க்கம் எனப்படுவது எது?
7. சன் மார்க்கம் என்றால் என்ன?

## குழுச் செயற்பாடு

குரு, இலிங்க, சங்கம வழிபாட்டின் பெருமையையும் அவ்வழிபாடுகளை மேற்கொண்டோரையும் தொகுத்து அட்டவணையாகக் காட்சிப்படுத்துங்கள்.

# தலயாத்திரை

14

திருவருட் சிறப்புமிக்க திருத்தலங்களைத் தரிசிப்பதற்காக மேற்கொள்ளும் புனித பயணம் தலயாத்திரை எனப்படுகிறது. உடலை வருத்தி, பாதத்தினால் மேற்கொள்ளப்படும் தலயாத்திரையைப் பாதயாத்திரை என்றும் சொல்வர். நாயன்மார்கள் திருத்தலம் தோறும் பாதயாத்திரை மேற்கொண்ட வரலாற்றை நாமறிவோம். திருநாவுக்கரசு நாயனார் கைலைக் காட்சிக்காகத் தன் உடல் வருத்தத்தையும் பாராது தவழ்ந்தும் உருண்டும் பயணித்த அருஞ்செய்கை பற்றிப் படித்துள்ளோம்.



இன்று இலங்கையிலிருந்து பக்தர்கள் பலர் இந்தியாவிற்குத் திருத்தலயாத்திரை செல்கின்றனர். இந்தியாவிலே சிதம்பரம், இராமேஸ்வரம் முதலான தென்னிந்தியத் திருத்தலங்களுக்கும் காசி, ஹரித்துவார் முதலான வட இந்தியத் திருத்தலங்களுக்கும் இத்தகைய பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலைக்கு ஐயப்ப பக்தர்கள் மேற்கொள்ளும் யாத்திரை பிரசித்தமானது. 41 நாட்கள் விரதமிருந்து மிக்க பயபக்தியுடன் இந்த யாத்திரையை அடியார்கள் மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையில் நெடுங்காலமாக கதிர்காமப் பாதயாத்திரை மிகப் புனிதமான முறையில் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

## கதிர்காமப் பாதயாத்திரை



ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில், மாணிக்க கங்கைக் கரையில் அமைந்துள்ள பழம்பெரும் முருகன் ஆலயம் கதிர்காமமாகும். இலங்கையில் உள்ள எந்த ஆலயத்துக்கும் இல்லாத வகையில் இலங்கைத் தீவின் வடக்கிலிருந்து தெற்கு வரை மிக நீண்ட ஒரு புனித பாதயாத்திரை இத்திருத்தலத்துக்கே மேற்கொள்ளப்படுகிறது. கதிர்காமத்து வருடாந்த உற்சவம் ஆடிமாதத்தில் 15 நாட்கள் நடைபெறும். அந்த உற்சவத்தில் கலந்து முருகப்பெருமானைத் தரிசிப்பதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் முருக பக்தர்கள் யாத்திரை மேற்கொள்வர்.

குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு முதலான பிரதேசங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் பாதயாத்திரை மேற்கொள்கின்றனர். மட்டக்களப்பில் இருந்து செல்வோர் கொடியேற்றத்துக்குப் பத்து நாட்களுக்கு முன்னர் தமது பாதயாத்திரையை ஆரம்பிப்பர். யாழ்ப்பாணத்து அடியார்கள் கொடியேற்றத்துக்கு மூன்று மாதங்களுக்குமுன் தமது யாத்திரையை ஆரம்பிப்பர்.

யாழ்ப்பாணத்தில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் பாத யாத்திரை ஆரம்பமாகும். வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம், திருகோணமலை வெருகல் முருகன் ஆலயம், மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் ஆலயம், மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், திருக்கோவில் முருகன் ஆலயம், உகந்தை முருகன் ஆலயம் முதலான தலங்களில் அடியார்கள் தங்கித் தம் யாத்திரையைத் தொடர்வர். இப்புனித பாதயாத்திரையில் செல்வச்சந்நிதி முதல் பாணமை வரையான 510 கிலோமீற்றர் தூரப் பயணம் குடியிருப்புகளை ஊடறுத்துச் செல்கின்றது. எஞ்சிய 90 கிலோமீற்றர் தூரம் அடர்ந்த வனப்பிரதேசமாகும். இது குமண, யால, கட்டகாமம், கதிர்காமம் ஆகிய அடர்ந்த காடுகளை உள்ளடக்கியது.

## முருகனும் வீரவாகுதேவரும் நடந்து சென்ற புனிதவனம்

கந்தக்கடவுளின் இப்புனித வனத்தில் முதன்முதலில் நடந்து சென்றவர்கள் முருகப்பெருமானும் வீரவாகுதேவருமே. சூரனை வதம் செய்வதற்காக முருகன் வீரவாகுதேவருடன் உகந்தைக் கடற்கரையில் தங்கத் தோணியில் வந்திறங்கி உகந்தை மலையில் தங்கியிருந்ததாகவும், பின் அங்கிருந்து இவ்வனப்பகுதியின் ஊடாக குமுக்கன் ஆற்றங்கரை சென்று அங்கு தங்கியதாகவும், பின் கபிலத்தைக் காட்டிற்குச் சென்று தங்கியதாகவும், சில காலத்தின் பின்பே கதிரமலை சென்று பாடிவீடு அமைத்து சூரபத்மனை வதம் செய்ததாகவும் ஒரு ஐதிகம் உண்டு. இவ் வைதிகத்தின்படி முருகனும் வீரவாகுதேவரும் நடந்துசென்ற பாதையிலேயே முனிவர்களும் சித்தர்களும் பிறரும் தமது புனித யாத்திரையை மேற்கொண்டார்கள்; மேற்கொள்கிறார்கள்.

கடந்த நூற்றாண்டில் சித்தர்கள் பலரும் கதிர்காமத்திற்கு பாத யாத்திரையாகச் சென்றுள்ளனர். இவர்களில் நல்லூர் யோகர் சுவாமிகள், காரைதீவு சித்தானைக் குட்டி சுவாமிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## முருகப்பெருமானின் அழைப்பு

''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்பதற்கிணங்க கதிர்காமப் பாதயாத்திரை செல்வதற்கு முருகனுடைய அழைப்பு இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். பாதயாத்திரை செல்லும் அடியவர் குழுவுக்குத் தலைமை தாங்குபவர் யாத்திரையை நெறிப்படுத்துவார். வேலாயுதத்தை வணங்கி யாத்திரையைத் தொடங்கும் யாத்திரிகர் ஒவ்வொருவர் கையிலும் வேல், மயிலிறகு ஆகியன இருக்கும். அடியார்கள் யாவரும் காவிநிற ஆடைஅணிந்து, சிவசின்னங்கள் தரித்து 'அரோகரா' கோசத்தோடு செல்லும் காட்சி பக்திப் பரவசமூட்டுவதாகும்.

யாத்திரிகர்கள் கால்நடையாக மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாது, கல்லிலும் முள்ளிலும் கால்வைத்து காடு, மேடு, ஆறு, சேறு, குளம், குட்டை, மலை, மடு எல்லாம் கடந்து, கந்தப் பெருமானைக் காண்பதொன்றையே குறிக்கோளாகக் கொண்டு செல்வார்கள். கொடிய விலங்குகள், நச்சுப் பிராணிகள் நடமாடும் காட்டுவழியில் முருகனையே நம்பியவர்களாய் அவனின் பெருமைகளைப் பேசியவாறும் பாடியவாறும் செல்வார்கள்.

**விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா**
**மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த**
**பழிக்குத் துணை அவன் பன்னிருதோளும் பயந்த தனி**
**வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே.**

கதிர்காமக் கந்தனின் இருப்பிடம் நெருங்க நெருங்க 'அரோகரா' கோஷம் வானைப் பிளக்கும். ஆனந்த மேலீட்டால் கண்ணீர் சொரியச் சொரிய மனமுருகிப் பாடுவர், ஆடுவர், கூத்தாடுவர். யாரைத் தரிசிப்பதற்கு இத்தனை நாட்களாக கானகத்தில் காடு மேடெல்லாம் கடந்து உடலை வருத்தி வந்தார்களோ அந்தத் தெய்வதரிசனமே அவர்களின் பிறவிப் பயனை அடைய வைத்துவிடும். அந்தத் தருணத்தில் அடியவர்கள் பெறும் உணர்வை வார்த்தைகளில் வர்ணித்தல் இயலாது. அது அனுபவத்தால் மட்டுமே உணரத்தக்கத்தக்கது. கதிர்காமப் பாதயாத்திரையானது அற்புதமான

இறையனுபவங்களை அடியவர்களுக்குத் தந்து அவர்களது இறைநம்பிக்கையை வலுப்படுத்துகிறது; எண்ணங்களை ஈடேற்றுகின்றது.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. தலயாத்திரை, பாதயாத்திரை என்பவற்றின் விளக்கம் யாது?
2. தலயாத்திரை மேற்கொள்ளப்படும் இந்தியத் திருத்தலங்கள் எவை?
3. கதிர்காமம் இலங்கையில் எவ்விடத்தில் அமைந்துள்ளது?
4. யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்குப் பாதயாத்திரையை மேற்கொள்வோர் எத்திருத்தலத்தில் இருந்து தமது யாத்திரையை ஆரம்பிப்பர்?
5. தமது யாத்திரையின்போது அவர்கள் தங்கிச் செல்லும் பிரதான ஆலயங்கள் எவை?
6. கதிர்காமப் பாதயாத்திரையை மேற்கொண்ட ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
7. கதிர்காமப் பாதயாத்திரை செல்வோரின் தோற்றத்தையும் செயல்களையும் தருக.
8. கதிர்காமப் பாதயாத்திரை செல்வோர் கடந்து செல்லும் வனப்பிரதேசங்கள் எவை?

## குழுச் செயற்பாடு

நீங்கள் சென்றுவந்த தலயாத்திரை (ஏதாவது ஒரு ஆலயம்) பற்றி உரை ஒன்று நிகழ்த்துங்கள்.

# உடலும் உயிரும் 15



இந்தச் சரீரம் எமக்கு ஏன் கிடைத்தது? ''இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்று நாவலர் பெருமான் கூறியிருப்பது மனங்கொள்ளத்தக்கது. எனவே எமது சரீரத்தைப் பாதுகாத்து வளர்ப்பதன் மூலம் எமது ஆன்மிக நிலையை வளர்த்துக் கொள்ள முடியும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

என்கிறார் திருமூலர். இதன் மூலம் உடலோம்புதலின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம். உடல்நலம் பேணுவதற்கு சத்துள்ள உணவு, உடற்பயிற்சி, ஓய்வு, ஒழுங்கான பழக்க வழக்கங்கள், சுத்தம் என்பன தேவையாகும். உடல் ஆரோக்கியத்துக்கும் மன ஆரோக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனம்

ஆரோக்கியமில்லாது போகும்போது உடலும் பாதிப்படைகிறது. இன்றைய உலகில் மன அழுத்தத்தினால் பலரும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் உடல் ரீதியாகவும் அவர்கள் பாதிப்படைந்துள்ளனர். நல்ல சிந்தனை இருக்கும் பட்சத்திலேயே சொல்லும் செயலும் நல்லவையாக அமையப்பெறும்.



இறைவனை வழிபடுவதற்கு திரிகரணங்களாகிய மனம், வாக்கு, காயம் மூன்றும் தூய்மையாக இருத்தல் அவசியமாகும். ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்று சுவாமி விபுலானந்தர் பாடியது இக்கருத்திலேயேயாம்.

உடல் நலமாக இருக்க தூய்மை பேணப்படுவது அவசியமாகும். புறத் தூய்மையை நீரினால் பெற முடியும். ஆனால் அகத் தூய்மையை எவ்வாறு பெறுவது? உள்ளம் தூய்மை பெற வேண்டுமானால் நல்ல எண்ணங்களால் உள்ளத்தை நிரப்ப வேண்டும். பொய், பொறாமை, கோபம், பேராசை முதலான அழுக்குகளை நீக்க வேண்டும். இந்தத் தீய குணங்களை நீக்க நாம ஜெபம் செய்தல் வேண்டும்; திருமுறைகளை ஓதல் வேண்டும்; நல்ல நூல்களை வாசிக்க வேண்டும்; இறைசிந்தனை, தியானம் என்பவற்றில் ஈடுபடல் வேண்டும். இவற்றால் மனம் ஆரோக்கியம் பெறும். உடம்பை ஆலயமாகக் கொள்ள வேண்டுமென்பதை,

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனம் மணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

-திருநாவுக்கரசர்

என்ற தேவாரப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

இதன்மூலம் உடலை ஆலயமாகக் கருதித் தூய்மை பேணுவதால் எமது வாழ்வு மேன்மை பெறும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

## உயிரோம்பல்



உடலைப் பாதுகாப்பதன் மூலமாகவே உயிரைப் பாதுகாத்துக் கொள்ளலாம். நமது உயிரைப் பேணி வளர்ப்பது போலவே இவ்வுலகிலுள்ள ஏனைய உயிரினங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். இதனாலேயே,

எவ்வுயிரும் என்னுயிர் போல எண்ணி இரங்க
தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே

எனத் தாயுமான சுவாமிகள் பாடியுள்ளார். சிபிச்சக்கரவர்த்தி புறா ஒன்றுக்காகத் தன்னையே தியாகம் செய்ய முன்வந்தார். கன்றை இழந்த தாய்ப்பசுவின் துயர் கண்டு தனது மகனையே இழக்கத் தயாரானான் மனுநீதிகண்ட சோழன்.

இக்கதைகள் தன்னுயிர் போல பிற உயிர்களையும் நேசிக்கும் மனிதப் பண்பினை வலியுறுத்துவனவாகும்.

எமது முன்னோர் கால்நடைகளுக்காகத் தண்ணீர்த் தொட்டி கட்டி வைத்தமை, புல் மேய்ந்துவிட்டு வரும் மாடுகள் சுணையைப் போக்க முதுகைத் தேய்ப்பதற்கு ஆவுரஞ்சிக்கல் அமைத்தமை முதலியன அவ்வுயிர்கள்மீது கொண்ட கருணையினாலேயே ஆகும். பசுவைக் கோமாதா என வழிபடுவதும் கருடனை கருடாழ்வார் எனக் கூறுவதும் உயிர்களை மதிக்கும் எமது சமயப் பண்பினையே குறிக்கின்றது. ஆலயங்களிலும் வீடுகளிலும் பூந்தோட்டம் அமைத்து செடி கொடிகளை வளர்த்தல், ஆலயத்தில் தல விருட்சங்களை வணங்குதல் முதலான எல்லாம் மரம் செடி கொடிகளை பேணிப் பராமரிக்கும் எமது பராம்பரியத்தை எடுத்துக் காட்டுவனவாகும்.

சைவசமயிகள் சைவ போசனத்தையே உண்ணுதல் வேண்டும். தமது உடலை வளர்க்கப் பிறிதோர் உயிரின் உடலை உண்பவர்கள் இறையருளைப் பெற முடியாது.



இறைவனே அனைத்து உயிர்களினதும் காவலன் ஆவான். இறைவன் பன்றிக் குட்டிக்களுக்குப் பால் கொடுத்தமை, ஆதிமூலமே என்றழைத்த யானைக்கு விஷ்ணு

அருள் புரிந்தமை ஆகியவை உயிர்கள்மீது இறைவன் கொண்ட கருணையையே எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு விலங்குகள், தாவரங்களாகிய உயிர்களைக்கூடப் போற்றிப் பேணும் நமது சைவமரபு, மனித உயிர்களைப் போற்றுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. இந்த உடம்பு நமக்குக் கிடைத்தது எதற்காக என்று நாவலர் பெருமான் கூறியுள்ளார்?
2. உடலை ஓம்புவதற்கு செய்ய வேண்டியவை எவை?
3. உடலாரோக்கியம் - மன ஆரோக்கியம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு யாது?
4. திரிகரணங்களும் எவை?
5. அகத்தூய்மையை எவ்வாறு ஏற்படுத்தலாம்?
6. எவ்வுயிரும் தன்னுயிர்போலக் கருதி இரக்கம் காட்டுவதற்கு அருள் செய்யுமாறு இறைவனை வேண்டிப் பாடிய அடியார் யார்?
7. உயிர்கள்மேல் இரக்கம் காட்டிய மன்னர்கள் யாவர்?
8. எமது முன்னோர்கள் உயிரிரக்கம் கொண்டு செய்த காரியங்கள் எவை?

## குழுச் செயற்பாடு

நீங்கள் ஒவ்வொருவரும் உடலையும், உயிரையும் ஓம்புவதற்காகச் செய்யும் செயல்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

# 16

# திருவாசகம்
# திருவிசைப்பா
# திருப்பல்லாண்டு

## திருவாசகம்



'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்பதை நாமனைவரும் நன்கு உணர்வோம். மாணிக்கவாசகப் பெருமான் இறைவன்மீது பரிபூரண பக்தியுணர்வுடன் உருகி உருகிப் பாடிய பாடல்கள், படிக்கும் தோறும் நமக்கும் பக்தி உணர்வை ஊட்ட வல்லன. திருவாசகத்தில் உள்ள ஒரு பிரபந்தம் திருச்சதகம். சதம் என்றால் நூறு என்று பொருள். தெய்வத்தன்மை வாய்ந்த நூறு பாடல்களைக் கொண்ட இப்பிரபந்தம் திருச்சதகம் எனப்பட்டது. அதில் இடம்பெறும் ஒரு பாடல் வருமாறு :

திருச்சிற்றம்பலம்

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்

போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிது ஒன்றில்லை

போற்றியோ நமச்சிவாய புறம்எனைப் போக்கல் கண்டாய்

போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாய் உள்ளவனே, பாம்பை ஆபரணமாக அணிந்தவனே, (வினைப்பயன் காரணமாக) அறிவு மயக்கம் உறுகின்ற என்னைக் காத்தருளுக! நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாய் உள்ளவனே, நான் அடைக்கலமாக அடையத்தக்க இடம் உன்னையன்றி வேறு எதுவும் இல்லை, ஆதலால் என்னைக் காத்தருள்க! நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாய் உள்ளவனே, நின் திருவருளுக்குப் புறம்பாகப் போய்விடாது என்னைக் காத்தருள்க! நமச்சிவாய என்னும் மந்திரப் பொருளாய் உள்ளவனே, நின் புகழ் வெல்க! வெல்க! என்னைக் காத்தருள்க! காத்தருள்க!

## திருவிசைப்பா



திருவிசைப்பா என்னும் சொல் திரு + இசை + பா எனப் பிரிந்து திரு என்பது தெய்வத்தன்மை, அழகு எனவும், இசை என்பது புகழ், பெருமை எனவும் பாஎன்பதுபாடல்எனவும்பொருள்தரும். அதாவது தெய்வத்தன்மைவாய்ந்த, இசையுடன் பாடும் பாடல் திருவிசைப்பா என்பதாகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறையுள் அடங்குவன. பஞ்சபுராணம் பாடும்போது திருவிசைப்பா மூன்றாவதாகப் பாடப்படும். திருவிசைப்பா அருளியோர் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்போர் ஆவர்.

''நையாத மனத்தினனை ...'' என்று தொடங்கும் திருவிசைப்பா, திரைலோக்கிய சுந்தரம் என்ற தலத்தின்மீது கருவூர்த்தேவரால் பாடப்பட்ட பதினொரு பாடல்களில் இரண்டாவது பாடலாகும். இறைவனின் புகழை இசையுடன் எடுத்துரைக்கும் அவரது பாடல்கள், கற்போர் மனதைக் கசிவிப்பதுடன் இறையன்பை வருவிக்கும் தன்மையும் கொண்டன.

திருச்சிற்றம்பலம்

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா! நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது அருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

*ஐயனே! அன்புற்று மனம் உருகாத என்னை, உருகச் செய்யும் பொருட்டு, நீ இவ்வீதியின் வழியே திருவுலா வந்தாய். அத்திருவுலாவைக் கண்ட அக்காலம் தொடக்கம் இன்றுவரை, கை கூப்பி மனம் உருகி நிற்கின்றேன். கண்ணீர் மல்கி உருகுகின்றேன். அப்படிச் செய்தாலும் திருக்கோட்டூரைச் சார்ந்த திரைலோக்கியசுந்தரம் என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேசப்பெருமானே! அடியேனுக்கு அருள் செய்யமாட்டாயா?*

## திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு பாடியவர் சேந்தனார் ஆவார். அவர் கால எல்லைக்கு அப்பாற்பட்ட இறைவனைப் ''பல ஆண்டுகள் வாழ்க'' என்று தம் அன்பின் மிகுதியாலும் நன்றிப் பெருக்காலும் வாழ்த்துகிறார். இப்பாடல்கள் ''பல்லாண்டு கூறுதுமே'' என்று வாழ்த்துதலினால், இப்பாடல் தொகுப்பினை திருப்பல்லாண்டு என்னும் பெயரால் போற்றினர்.

இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் சேந்தனார். அவர் நாள்தோறும் சிவனடியார்களுக்கு உணவளித்து, எஞ்சியதையே உண்டுவந்தார். அவரது சிவ பக்தியை உலகினருக்கு உணர்த்த இறைவன் விரும்பினார். ஒருமுறை சிதம்பரத் தேர்த் திருவிழா நாளிலே, தேரானது திருவீதியிற் சிறிது தூரம் சென்று, பின் ஓடாது நின்றது. சிவனடியார் அனைவரும் அதனை இழுக்கத் தம்மாலான முயற்சி களைச் செய்தும் முடியவில்லை. அப்பொழுது '' சேந்தா, நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்'' என்று ஓர் அசரீரி கேட்டது. சிவனடியார் கூட்டத்தோடு தேரின் வடம் பிடித்திருந்த சேந்தனார் திருவருளின் திறத்தை எண்ணி வியந்தார். '' மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் ...'' என்று தொடங்கி, திருப்பல்லாண்டு பாடினார். அவர் பாடியதும் தேர் அசைந்து, மெல்ல நகர்ந்து இருப்பிடத்துக்கு வந்தது. அப்போதுதான் சேந்தனாரின் பெருமையை எல்லோரும் உணர்ந்தனர். அவரது இறை பக்தியின் சிறப்பைப் போற்றினர்.

திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையுள் அடங்கும். பஞ்சபுராணம் பாடும்போது, திருப்பல்லாண்டு நான்காவதாகப் பாடப்படும்.



தலம் - தில்லை (கோயில்) பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

வேதமாகிய மெய்ம்மொழியை ஆராய்ந்து, அதன் பொருள் சிவபெருமானே என உணர்ந்து கொண்ட தூய மனமுடைய திருத்தொண்டர்களே! நீங்கள் சில ஆண்டுகளில் அழிந்து விடுகின்ற சிறு தேவர்களை மெய்ப்பொருள் எனக் கருதிப் பொய் நெறியிற் செல்லாதீர்கள்! மாமேருமலையை வில்லாக வளைத்த அழகனும் இடப வாகனனும் பல ஆண்டுகள் என்ற காலத்தைக் கடந்து என்றும் உள்ளவனுமான எங்கள் சிவபெருமானுக்கே பல்லாண்டு கூறி வாழ்த்துவோம்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. திருச்சதகம் என்றால் என்ன?
2. ‘போற்றி’ என்பதன் பொருள் யாது?
3. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
4. கருவூர்த்தேவர், தான் இறைவனை எவ்வாறு வழிபட்டதாகக் கூறுகிறார்?
5. சிதம்பரத் தேர்த் திருவிழாவில் ஒலித்த அசரீரி யாது?
6. சேந்தனார் தொண்டர்களை எவ்வாறு வழிப்படுத்துகிறார்?

## குழுச் செயற்பாடு

திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களை இசையோடு பாடுங்கள்.

# நாட்டார் வழிபாடு

## 17



சமயம் என்பது, உலகில் உள்ள எல்லாவற்றுக்கும் மேலாக, அவை எல்லாவற்றையும் இயக்கும் சக்தி ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு, அச்சக்தியை வணங்கி வாழும் நெறிமுறையாகும். அவ்வாறாக உலகில் பல சமயங்கள் நிலவுகின்றன. ஒவ்வொரு சமயமும் தான் தான் தோன்றிய சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப சிலசில தனித்துவங்களை உடையதாக அமைகின்றது.

இந்து சமயம் உலகிலுள்ள சமயங்களுள் மிகத் தொன்மையானது; அதேவேளை கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப தன்னைத்தானே புதுப்பித்து வளர்ந்து வருவது. இறைவனை அடைவதற்கான மார்க்கம் - அவனது அருளைப் பெறுவதற்கான மார்க்கம் - ஒன்றுதான் என்று இந்து சமயம் வரையறுத்துக் கொண்டதில்லை.

இறைவன் தனியொரு உலகத்தில் வீற்றிருப்பவன் அல்லன். அவன் அண்ட சராசரம் அனைத்திலும் வியாபித்திருப்பான். அவன் தூணிலும் உள்ளான்; துரும்பிலும் உள்ளான். ஆகையால் இறைவனை எங்கும் எதிலும் கண்டு கொள்ளாலாம். அவரவர் பக்குவத்துக்கேற்ப எந்த வகையிலும் அவனை வழிபடலாம். அவனை, எவரெவர் எவ்வெவ்வாறு எண்ணி வழிபட்டாரோ அவரவருக்கு அவ்வவ்வாறு வந்து இறைவன் அருள் புரிவான் என்பது இந்துசமயத்தின் பரந்தக் கோட்பாடு ஆகும். இங்கு இறைவனின் வியாகபகத் தன்மை சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது.

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்''

**- சிவஞானசித்தியார்**

இந்து சமயத்துள்ளே சைவம், வைணவம் முதலான ஆகம நெறிப்பட்ட மார்க்கங்கள் உள்ளன. அவை தத்தமக்கென நியமித்துக் கொண்ட விதிமுறைகளோடு கூடியவை. அவற்றுக்கு அப்பால் அந்த விதிமுறைகளைக் கடந்தனவாக அமைந்த சில வழிபாட்டு முறைகளும் இந்துசமயத்துள் அடங்குகின்றன. அவை பெரும்பாலும் கற்றறியாத நாட்டுபுற மக்களால் பின்பற்றப்பட்டு வருவன. ஆதலால் அத்தகைய வழிபாட்டு மரபை நாட்டார் வழிபாடு என்பர். அவர்களால் வழிபடப்படும் தெய்வங்களை நாட்டுபுறத் தெய்வங்கள் என்பர்.

ஆகம நெறிசார்ந்த சைவம், வைணவம் முதலான மார்க்கங்களால் முதன்மைப் படுத்தப்படுகின்ற சிவன், திருமால் முதலான தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் எனப்படுவன. அவை பிரதேச எல்லை கடந்து அகண்ட இந்தியாவிலும் அதற்கு அப்பாலும் வழிபடப்படுவன.

நாட்டுபுறத் தெய்வங்கள் அவ்வாறன்றி குறித்த ஒரு பிராந்தியத்தில் மாத்திரம் அந்தப் பிராந்திய மக்களது மனப்பான்மைக்கேற்ற நெறிமுறைகளோடு வணங்கப்படுவன. ஆதலால் அவை சிறுதெய்வங்கள் எனவும் குலதெய்வம்,

ஊர்த்தெய்வம், கிராமதேவதை, காவல் தெய்வம், எல்லைத் தெய்வம் முதலிய பெயர்களாலும் சுட்டப்பெறுகின்றன. அப்பெயர்களே அத்தகைய வழிபாட்டு மரபுகளின் எல்லையை உணர்த்தவல்லன.

மாடன், காடன், பிடாரி, மதுரைவீரன், கறுப்பண்ணன், ஐயனார், காத்தவராயன், பெரியதம்பிரான், கண்ணகி, திரௌபதி முதலான பெருந்தொகையான சிறு தெய்வங்கள் உள்ளன. சிறுதெய்வம் ஒவ்வொன்றும் வெவ்வேறு பிராந்தியங்களில் வெவ்வேறு குடிகளினால் முக்கியத்துவம் கொடுத்து வழிபடப்படுகின்றன. சிறுதெய்வங்கள் சில பெருந்தெய்வ வழிபாட்டு மரபுகளுக்கமைய வழிபடப்படும் நிலைக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையையும் நமது சமய வரலாற்றிலே கண்டு கொள்ளலாம். இங்கு, பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் ஆகிய சிறுதெய்வங்கள் பற்றிய சில விடயங்கங்களை நாம் அறிந்து கொள்வோம்.

## பெரிய தம்பிரான்



பெரியதம்பிரான் கிராமியத் தெய்வம் ஆவார். ஆயினும் பெருந்தெய்வமான சிவபெருமானோடு தொடர்புபட்ட வகையிலேயே அவர் பற்றிய கதைகள் அமைந்துள்ளன. பெரிய தம்பிரானின் தோற்றம் பற்றிக் கூறும் கதை வருமாறு:

தக்கன் ஒரு யாகம் செய்தான். அதில் உரிய கௌரவத்தினை வழங்காது சிவபிரானை அவமதித்தான். அதனால் சிவபிரானின் திருமேனியிலிருந்து வீரபத்திரர் தோன்றினார். வீரபத்திரர், கோபம் மிக்கவராய், சிவபிரானை மதியாது நடத்திய அந்த யாகத்துக்கு வந்திருந்த தேவர்களையெல்லாம் தாக்கினார். தக்கனது தலையை வெட்டி அக்கினியில் இட்டார். அதைக் கண்ட பெரியதம்பிரான் ஓட்டமெடுத்தார். வீரபத்திரர் அவரைத் துரத்தத் தொடங்கினார்.

பெரியதம்பிரான் சலவைத் தொழிலாளி ஒருவனிடம் தஞ்சமடைந்தார். அவன் பெரியதம்பிரானை வீரபத்திரர் காணாதபடி மறைத்துக் காப்பாற்றினான். துரத் திவந்த வீரபத்திரர் அவனிடம் பெரியதம்பிரான் பற்றி வினவிய போதும் அவன் அவரைக் காட்டிக் கொடாது காப்பாற்றினான். அதேவேளை விகடக்கூத்துக் களால் வீரபத்திரரையும் சாந்தப்படுத்தினான். தான் பெரியதம்பிரானைக் காப்பாற்றுவதற்காகப் பொய் சொன்னதை பின்னர் அவருக்கு எடுத்துரைத்தான். சலவைத் தொழிலாளியின் நல்லியல்பு கண்ட வீரபத்திரர் 'பெரியதம்பிரானை உங்கள் குல தெய்வமாகக் கொண்டு நன்மையடையுங்கள்' என வாழ்த்திச் சென்றார். அன்றிலிருந்து பெரியதம்பிரான் சலவைத் தொழிலாளிகளால் அவர்களது குலதெய்வமாக வழிபடப்படுகிறார்.

இவ்வாறு பெரிய தம்பிரானோடு தொடர்புபட்ட பல கதைகள் நிலவுகின்றன. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள தமிழர்களுள் ஒரு பகுதியினர் பெரியதம் பிரானைத் தங்கள் குலதெய்வமாக கொண்டு வழிபடுகின்றார்கள். வருடாவருடம் பெரியதம்பிரான் கோவிலில் சடங்கு இயற்றுகிறார்கள். அச்சடங்குகளுக்கென்று விதிமுறைகள் சில பின்பற்றப்படுகின்றன. பெரியதம்பிரான் காவியம் முதலான சில தோத்திரப்பாங்கான பாடல்களும் அதன்போது படிக்கப்படுகின்றன.

## ஐயனார்

தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தை அடக்க எண்ணிய சிவபிரானுக்கும், மோகினி வடிவங்கொண்ட திருமாலுக்கும் புத்திரராக ஐயனார் உதித்தார். என்று புராணங்கள் கூறுகின்றன. அதனால் அவர் அரிஹர புத்திரன், அரிஹர சுதன் என்னும் பெயர்களாற் சுட்டப் பெறுகிறார். அவர் சைவ வைணவ சமயங்களின் ஒருமைப்பாட்டின் அடையாளமாகவும் துலங்குகிறார். நீண்ட காலமாக தமிழ் மக்களால் சாத்தன், சாத வாகனன் முதலான பெயர்களில் கிராமிய முறையில் வழிபடப்பட்டு வந்த ஐயனார் சிவனதும் திருமாலதும் புத்திரன் என்ற நிலையில் ஆகமநிலைப்பட்ட வகையிலும் வழிபடப்பட்டு வருகிறார். தமிழகத்திலும் இலங்கையிலும் ஐயனார் கோயில்கள் பல உண்டு. சிங்கள மக்களாலும் ஐயனார் வழிபடப்படுகிறார். கேரள மாநிலத்தில் உள்ள சபரிமலையில் அமைந்துள்ள



ஐயப்பன் சந்நிதானமே ஐயனார் வழிபாட்டின் மத்தியஸ்தானமாக விளங்குகின்றது. உலகின் பலபாகங்களிலும் உள்ள ஐயப்ப பக்தர்கள் வருடாந்தம் நாற்பத்தொரு நாள் கடும் விரதம் அனுட்டித்து சபரிமலைக்கு யாத்திரை செய்து தை மாதம் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவர். அவர்களுக்கு அங்கு கிட்டும் மகரஜோதி தரிசனம் தெய்விக அனுபவமாய் அமையப் பெறுகிறது.

## காத்தவராயர்



தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள தமிழர்கள் காத்தவராயரை வழிபடுகிறார்கள். காத்தவராயர் கதையும் வழிபாடும் இடத்துக் கிடம் சிற்சில வேறுபாடுகளோடு வழங்கி வருகின்றன.

தமிழகத்தில் வழங்கும் கதையொன்று முருகனே காத்தவராயராகப் பிறந்தார் எனக் கூறுகிறது. சிவபிரானது ஆணைப்படி உமாதேவியார் மண்ணுலகிற் பிறந்து பூஞ்சோலைகள் அமைத்து தவம் செய்தபோது, முருகனே மானிடப் பிறவி கொண்டு அவற்றைக் காத்தலில் ஈடுபட்டதனால் காத்தவராயர் எனப்பட்டார். தமிழகத்தில் காத்தவராயர் கதை வேறும் பல வகைகளில் வழங்குகின்றது.

இலங்கையில் வழங்கும் கதையின்படி காத்தவராயர் மாரியம்மனின் வளர்ப்பு மகனாவார். இங்கு காத்தவராயர் வழிபாடு மாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புபட்டதாகவே அமைகிறது. காத்தவராயர் ஊர்க்காவல் தெய்வமாக விளங்குகிறார். மரபு

வழிக் கதைகளின் படியும் காத்தவராயர் காவல்தெய்வமாகவே போற்றப்படுகிறார். காத்தான், காத்தவராயர், காத்தவராயசுவாமி என்னும் பெயர்களும் அதற்குச் சான்றாகின்றன.

காத்தவராயர் பற்றிய கதைகள், கதைப் பாடல்களாகப் பாடப்பட்டும் கூத்துக் களாக ஆடப்பட்டும் வருகின்றன. அவை காத்தவராயர் வழிபாட்டின் அங்கமாகவும் அமைகின்றன.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. சிவன், திருமால் ஆகிய தெய்வங்கள் பெருந்தெய்வங்கள் எனப்படுவதன் காரணம் யாது?
2. நாட்டார் தெய்வங்களைச் சிறு தெய்வம் என்று அழைப்பதற்கான காரணம் யாது?
3. நாட்டுப்புறத் தெய்வங்களைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?
4. பெரியதம்பிரான் பற்றிய கதைகளில், அவரோடு தொடர்புபட்ட வகையில் அமையும் கடவுள் யார்?
5. ஐயனாருக்குரிய வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
6. ஐயனார் வழிபாட்டில் முதன்மை பெறும் தலம் எது?
7. தமிழகத்தில் காத்தவராயர் யாருடைய அவதாரமாகக் கருதப்படுகிறார்?
8. இலங்கையில் காத்தவராயர் வழிபாடு எத்தெய்வத்துடன் தொடர்புபட்டதாய் அமைகிறது?

## குழுச் செயற்பாடு

உங்கள் பிரதேசத்திலுள்ள நாட்டார் தெய்வத்தையும், வழிபாட்டு முறையையும் அறிந்து எழுதுங்கள்.

# சைவசித்தாந்தத்தில் பாசம் 18

சைவசமயத்தின் பொதுநூல் வேதம்; சிறப்புநூல் சிவாகமம். சிவாகமநூல்கள் கூறும் உண்மையைச் சாரமாகப் பிழிந்தெடுத்துத் தரும் நூல்களே சித்தாந்த சாத்திரங்கள். இவை மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் அழைக்கப்படும். வேதம் பசு, அதன் பால் ஆகமம், அதிற் கடைந்தெடுத்த நெய் திருமுறை, அந்த நெய்யின் சுவையே சித்தாந்தம் என்று உரைப்பர். வேதம் ஒரு கற்பகதரு, அதில் உயர்தோங்கிய கிளை உபநிடதம், அதில் பழுத்த நறுங்கனியே சைவ சித்தாந்தம் எனவும் உரைப்பர்.

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை பற்றிப் பேசு கிறது. அனைத்து உயிர்களுக்கும் தனி முதல்வனாக இருப்பவன் பதி. ஆன்மாக்கள் (உயிர்கள் / பசுக்கள்) எண்ணிறந்தன. இறைவனை அடையவிடாது ஆன்மாக்களைக் கட்டி நிற்கும் தளைகள் பாசம் எனப்படுகின்றன.

தளை, கட்டு, பந்தம் என்பன ஒரே பொருளைத் தரும் சொற்கள். அத்தளைகளாவன ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். இம்மூன்றும் ஆன்மாக்களிடம் காணப்படும் அழுக்குகளாகக் கருதப்படுவதால் அவை மலம் என்று அழைக்கப்படுகின்றன. மலங்களிலிருந்து விடுபட்டு இறைவனை அடைவதே ஆன்மாக்களின் இலட்சியமாக இருத்தல் வேண்டும். அந்நிலையிலேயே ஆன்மாக்கள் துன்பம் நீங்கி, பேரின்பத்தை எய்தும்.

ஒரு வேந்தன் சண்டை செய்யத் தொடங்குமுன் தன் எதிரியுடைய சேனைப்பலம், செல்வம், போர்த்தொழிலுக்குரிய கருவிகள் முதலானவற்றை நன்றாக ஆராய்ந்து அறிய வேண்டும். எதிரியுடைய பலத்தைக் குறைவாக நினைத்துப் போருக்குப் போனால் தோல்வியே வந்துசேரும். அதுபோல நம்மை(ஆன்மாக்களை) பீடித்திருக்கும்

பாசங்களை நாம் வெல்ல வேண்டுமானால் அவற்றினுடைய பலத்தையும் தன்மையையும் நன்றாக உணரவேண்டும். பாசங்களுள் வலிமையானது ஆணவம் ஆகும்.

## ஆணவம்

ஆன்மாவுக்கு நல்லுணர்வு வராமல் அதன் அறிவைத் தடுத்துக் கொண்டிருப்பது ஆணவமாகும். அது ஆன்மாவிலே ஆசை, கோபம், மயக்கம் முதலிய தீய குணங்களை உண்டாக்குவது. 'நான் பெரியவன்' என்று சிந்திக்க பண்ணும் அகந்தையை - அகங்காரத்தை - உண்டாக்கும். 'இது எனது' என்ற மமதையையும் - மமகாரத்தையும் - உண்டாக்கும். செம்பிலே களிம்பும் நெல்லிலே உமியும்போல ஆன்மாவோடு அநாதியாக உள்ளது ஆணவம். அதாவது ஆன்மா என்றுள்ளதோ அன்றிலிருந்து ஆணவமலமும் அதனோடு இருப்பது. அதனால் ஆணவத்தை 'சகசமலம்' என்பர். ஆணவமானது ஆன்மாவின் அறிவிற்கு அநாதிகாலமாகவே தடையாக இருப்பதால் 'மூலமலம்' என்றும் அதனைக் கூறுவர்.

ஆணவத்தை வெல்வதற்கு நமக்குத் துணையாக இருப்பது கடவுளின் திருவருளே. எங்களுக்குத் திருவருளாகிய துணை என்றும் உள்ளது. நாம் அதனைப் பொருட்படுத்துவதில்லை. மாறாக, எம்மோடு கூடவே உள்ள சகசமலமாகிய ஆணவத் திற்கு ஆட்படுகிறோம். அதனால் பல துன்பங்களுக்கு ஆளாகிறோம். எம்மைத் துன்பங்களுக்கு உள்ளாக்கும் ஆணவத்திடமிருந்து விடுபடவேண்டுமானால் நாங்கள் கடவுளின் அருளைப் பெறவேண்டும். அதற்குக் கடவுள்மீது நாம் உண்மையான பக்தி கொள்ளவேண்டும்.

## கன்மம்

ஆணவத்தின் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் செயல்கள் கன்மம் எனப்படும். கன்மம், வினை, செயல் ஆகியவை ஒரு பொருள் குறித்த சொற்கள். ஆன்மாக்கள் மனம், மொழி, மெய்களால் செய்யும் நல்ல செயல்களும் தீய செயல்களும் கன்மம் எனப்படும். கன்மத்தின் காரணமாகவே ஆன்மாக்கள் பிறப்பு, இறப்பிற்கு உட்படுகின்றன.

கன்மம் மூன்று வகைப்படும். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பனவாகும். இவை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை எனப்படும். சஞ்சிதம் என்பது ஒரு ஆன்மாவானது பல பிறவிகளிலும் செய்த நல்வினை, தீவினைப் பயன்களின் தொகுதியாகும். அத்தொகுதியிலிருந்து குறித்த ஒரு பிறவியில் அந்த ஆன்மாவால் அனுபவிக்கப்படும் வினைப்பயன் பிராரத்தம் எனப்படும். பிராரத்தத்தை அனுபவிக்கும்போது புதிதாகச் செய்யும் நல்வினை, தீவினைகள் ஆகாமியம் எனப்படும். கன்மமும் மறுபிறப்பும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாக வந்து கொண்டிருப்பதனால் கன்மத்திலிருந்து - பிறவித்துன்பத்திலிருந்து - விடுபட்டு இறைவனை அடைதலே முத்தியாகும்.

உலக இன்பங்களைத் தருவதுபோலக் காட்டி ஆன்மாக்களைக் கெடுக்கும் செயல்கள் தீவினைகளாகும். ஆசை, கோபம், பெருமை, செருக்கு, நீதி யீனம் முதலானவை தீவினைக் குணங்களாகும். ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினைகளாகும். கடவுள் பக்தி, அன்பு, நீதி, உண்மை, பொறுமை முதலானவை நல்வினைக் குணங்களாம். நல்வினைகளும் கன்மமாக இருப்பதனால் அவையும் ஆன்மாக்களுக்கு நற்பிறவிகளைக் கொடுக்கும். எனவே பற்றற்றுச் செய்யும் நிஷ்காமிய கர்மங்களே ஆன்மா ஈடேறுவதற்கு வழியாகின்றன. எனவே பற்றற்ற நிலையில் நின்று கடவுளுக்கும் மெய்யடியார் முதலானவர்களுக்கும் செய்யும் வழிபாடும் தொண்டுகளும் புண்ணியமாகி ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவும். பிற உயிர்கள்மேலே காட்டும் இரக்கம், அவற்றுக்குச் செய்யும் உதவிகள் முதலானவையும் அத்தகையனவே.

## மாயை

மருத்துவன் நோயாளிக்குப் பரிகாரம் செய்து நோயைக் குணப்படுத்துவான். அதுபோலவே ஆணவ நோயுள்ள ஆன்மாவைக் குணப்படுத்தும் பொருட்டு வைத் தியநாதனாகிய இறைவன் தனு (உடல்), கரணம் (பொறிகள் முதலியன), புவனம் (உலகு), போகம் (இன்ப துன்ப அனுபவங்கள்) ஆகியவற்றைத் தோற்றுவித்துள்ளான். இறைவனுடைய அளவிறந்த சக்திகளுள் மாயையும் ஒன்றாகும். உலகம் தோன்றுவதற்கும்

ஒடுங்குவதற்கும் அடிப்படையானது மாயை ஆகும். மாயையில் இருந்தே தனு, கரண, புவன போகங்கள் தோன்றுகின்றன. மாயையே இந்த நான்குமாய் நின்று உயிர்களுக்கு உதவுகின்றது. சூரிய ஒளி வரும்வரை இருளில் நிற்பவனுக்கு, விளக்கு சிறிதளவு ஒளிதந்து உதவுவது போலவே, ஆணவ இருளில் நிற்கும் உயிர்களுக்குத் திருவருளாகிய பேரொளி வந்துசேரும்வரை மாயா காரியங்களாகிய தனு, கரண, புவன, போகங்கள் சிறிதளவு அறிவு விளக்கம் செய்து நிற்கின்றன.

ஆன்மாவை அநாதியாகவே பற்றியுள்ள ஆணவம் அருவமானது. அதன் வலியால் ஆன்மா செய்யும் கன்மமாகிய இருவினைகளும் அருவமானவையே. அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களும் அருவமானவையே. மாயை ஒன்றுதான் அருவமும் உருவமுமாகிய இரு நிலைகளிலும் நின்று உயிருக்கு உதவுவது.

மூலமலமான அழுக்கை நீக்குதற்குப் புதிதாகச் சேர்த்த அழுக்கே மாயாமலம் என்பர். ஆடையிலுள்ள அழுக்கை நீக்கச் சேர்த்த சவர்க்காரம் என்னும் அழுக்கைப் போல உள்ளது மாயை. ஆதலால் இது துணை மலம் எனப்படும். இது அழுக்குமாய் மூலமான அழுக்கை நீக்கும் சாதனமுமாய் இருக்கிறது. அதாவது ஆன்மாவுக்கு ஆணவத்தின் சார்பாய் நின்று ஆன்மா மெய்யறிவு பெறாதபடி மயக்குவதும், திருவருளின் சார்பாய் நின்று ஆன்மா மெய்யறிவு பெற உதவுவதுமாகிய இரு செயல்களையும் இது புரிகிறது.

ஆன்மா இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதும்போது இருவினை ஒப்பு ஏற்படுகிறது. ஆகையால் ஆகாமிய வினை விளையாது; ஆனால் இருக்கின்ற பிராரத்த வினை அனுபவித்துத் தீர்க்கப்படவேண்டியது. இந்நிலையில் குரு, ஆன்மாவைத் தேடிவந்து, தீட்சையால் சஞ்சிதவினையை நீக்குவார். அப்போது ஆணவமலம், பரிபாகமடையும் (வலிமை குன்றும்); சத்திநிபாதம் நிகழும் (அருட் சக்தி பிரகாசிக்கும்); அத்துவிதமுத்தி சித்திக்கும் (இறையோடு ஆன்மா கலக்கும்). இதுவே ஆன்ம ஈடேற்றமாகும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. சைவசமயத்தின் பொது நூல் எது? சிறப்பு நூல் எது?
2. சைவசிந்தாந்த நூல்கள் எவற்றின் சாரமாக அமைந்துள்ளன?
3. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் எவை?
4. ஆன்மாவைக் கட்டியிருக்கும் தளைகள் எவை?
5. ஆணவம் 'சகசமலம்' என்று கூறப்படுவதற்கான காரணம் யாது?
6. ஆன்மாக்களின் பிறப்பு, இறப்பிற்குக் காரணமாக அமைவது எது?
7. உலகத் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணமாய் அமைவது யாது?

## குழுச் செயற்பாடு

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் பற்றி வினாவிடைப் புத்தகம் ஒன்றை ஆக்குங்கள்.

# ஈழத்தில் சைவசமயம் 19

இராமாயணம் என்னும் இதிகாசம் இலங்கையை இராவணன் ஆண்டான் என்றும் அவன் சிறந்த சிவபக்தன் என்றும் சித்திரிக்கின்றது. ஈழநாட்டினை 'சிவபூமி' எனத் திருமூலர் போற்றுவார். சிவவழிபாடு சிறப்புற்று விளங்கியமையால் அதனைச் சிவபூமி என்றார்.

இலங்கையில் சைவம் வளர்ந்தவாற்றை வரலாற்றாய்வாளர் பலரும் தொல்பொருட் சான்றுகளின் அடிப்படையிலும் மரபுரீதியான வரலாற்று நூல்களின் அடிப்படையிலும் எடுத்துரைத்துள்ளார்கள். அவர்கள் கூறியவற்றின் அடிப்படையில், புராதனகாலம் முதல் பொலநறுவைக் காலம் வரையில் இலங்கையில் சைவசமயம் எவ்வாறு நிலைபெற்றிருந்தது என்பது பற்றிச் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

இலங்கையில் மக்களால் பின்பற்றப்படும் சமயங்களுள் இந்துசமயமே தொன்மையானது. பௌத்த மதம் இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் வைதிகநெறியினைப் பின்பற்றிய பிராமணர்கள் வாழ்ந்து வந்தனர். இலங்கை மக்கள் மத்தியில் சைவசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட, பண்டுகாபயன் என்னும் மன்னன் பிராமணர்கள் கிரியைகளை மேற்கொள்வதற்கும் வழிபடுவதற்குமாக யாகசாலைகளையும் சிவன்கோவில் ஒன்றையும் நிர்மாணித்தான் என்று பாளி மொழியில் அமைந்த இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. பிற சிங்கள மன்னர்களுள்ளும் சிலர் சைவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவர்கள் கிரிகண்டசிவன், மூத்தசிவன், மகாசிவன் முதலான பெயர்களைக் கொண்டிருந்தனர்.

இலங்கையின் புராதன சமுதாயத்திலே வைதிகப் பிராமணர் பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாக அவர்கள் அக்கால அரசர்களுக்கு புரோகிதர்களாகவும் ஆலோசகர்களாகவும் விளங்கினார்கள். அவர்கள் அரச குலத்தவர்களின் குருமாராக விளங்கி அரசநீதி, போர்க்கலை, வானசாஸ்திரம், மொழி, இலக்கியம் முதலானவற்றைப் போதித்தார்கள். புராதன இலங்கையில் சில பிராமணர்கள் பெருநிலக்கிழார்களாகவும் விளங்கினார்கள். அவர்கள் பருமக (பெருமகன்) எனப்பட்டார்கள்.

தேவநம்பிய தீசன் காலத்திலே மகிந்த தேரர் மூலம் பௌத்தம் இலங்கைக்கு அறிமுகமானது முதல், இங்கு இந்துசமயத்தின் செல்வாக்கு குன்றத் தொடங்கியது. பௌத்தம் இலங்கையின் பெரும்பாலான மக்களாற் பின்பற்றப்பட்டது. எனினும் இந்து வழிபாட்டு முறைகளும் கலாசார அம்சங்களும் சிங்கள - பௌத்த கலாசாரத்தோடு சங்கமித்ததுடன் அக்கலாசாரத்தின் இன்றியமையாக் கூறுகளாயும் அமைந்தன. பௌத்தத்தின் செல்வாக்குக் காரணமாக இலங்கைவாழ் தமிழ் மக்களுள்ளும் கணிசமானவர்கள் பௌத்தர்களானார்கள் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இலங்கையில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்த நிலையிலும் அக்காலத்தில் பெருந் துறைமுகப் பட்டினங்களாக விளங்கிய மாதோட்டம், திருகோணமலை ஆகிய இடங்களில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய சிவத்தலங்கள் தொடர்ந்தும் சைவத்தின் கேந்திர நிலையங்களாக விளங்கின.

தென்னிந்தியாவிலே பல்லவரின் ஆட்சிக்காலத்தில் சைவ, வைணவ அடியார்கள் பக்தி இயக்கத்தின் மூலம் ஏற்படுத்திய வைதிக மறுமலர்ச்சியின் விளைவாக, இலங்கையில் சைவ சமயம் மீண்டும் வலுப்பெற்றது. அக்காலம்முதல் இலங்கையில் இந்து சமயத்தின் வரலாறு தமிழ்ச் சமுதாயத்தோடு தொடர்புபட்டதாகவே வளர்ச்சிகண்டது.

இலங்கைக்கு வந்துசென்ற வணிகர்கள், மாலுமிகள் மூலமாக திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களின் பெருமை தமிழகத்திலும்

பரவியது. சைவசமய குரவர்களுள் ஒருவரான திருஞான சம்பந்தரால் அத்தலங்கள் புகழ்ந்து பாடப்பெற்றன. மற்றொரு குரவரான சுந்தரமூர்த்தி நாயனாரும் திருக்கே தீஸ்வரத் தலத்தைப் போற்றும் பதிகம் ஒன்றைப் பாடியருளினார்.

தமிழகத்தில் சோழப்பேரரசு நிலவிய காலத்தில் அங்கு சைவம் தழைத்தோங்கியது. சோழ மன்னர்களுட் சிலர் தங்கள் ஆட்சிப்பரப்பினை இலங்கையையும் உட்படுத்தியதாக விஸ்தரித்தார்கள். முதலாம் இராஜராஜ சோழன் அநுராதபுரத்தில் நிலைபெற்றிருந்த இராஜரட்டை அரசைக் கைப்பற்றி, சோழப்பேரரசுடன் (கி.பி 993 இல்) இணைத்தான். பொலநறுவையை தலைநகராக ஆக்கிய சோழர்கள், தங்கள் பேரரசுக்குள் அடங்கிய ஈழமண்டலத்துக்கு 'ஜனநாதமங்கலம்' என்று பெயரிட்டார்கள்.

இலங்கையின் வடபகுதியில் சோழராட்சி நிலைகொண்ட காலத்தில் தென்பகுதியில் உறுகுணையில் ஆட்சிசெய்துவந்த ஐந்தாம் மகிந்தன் என்னும் மன்னனையும் சோழர்கள் (கி.பி 1017இல்) தோற்கடித்தார்கள். இலங்கையின் பெரும்பகுதி சோழர் ஆட்சிக்குட்பட்டது. இலங்கையில் சோழராட்சி நிலைபெற்றிருந்த காலத்தில் இங்கே இந்து சமயமும் பண்பாடும் பெருவளர்ச்சி கண்டன.

சோழராட்சிக்கு உட்பட்ட ஈழமண்டலத்திலே, பாடல்பெற்ற தலங்களாக விளங்கிய திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் சோழ அதிகாரிகளின் முதன்மையான கவனத்தைப் பெற்று வளர்ச்சிகண்டன. வேறு பல இடங்களிலும் புதிய ஆலயங்கள் பல சோழ மன்னர்களாலும் அதிகாரிகளாலும் நிறுவப்பட்டன. அவற்றுக்கு வேண்டிய வேதியர்கள், பணியாளர்கள் முதலானவர்கள் கோயிற் சுற்றாடல்களில் குடியமர்த்தப்பட்டார்கள். கோயிலை நிர்வகிப்பதற்குரிய பொருளாதாரத்தின் பொருட்டு நிவந்தங்களும் மானியங்களும் வழங்கப்பெற்றன.

பொலநறுவையிலே பதினாறு இந்துக் கோயில்கள் இருந்தமைக்கான தொல்பொருட் சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றுட் பல, சோழராட்சிக்

காலத்தில் அமைக்கப்பட்டிருந்தல் கூடும். ஆயினும் இரண்டாம் சிவாலயம் ஐந்தாம் சிவாலயம், என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள இரண்டு ஆலயங்களில் மாத்திரமே சோழர்காலத்தன என்று உறுதிப்படுத்தக்கூடிய கல்வெட்டுக்கள் கிடைக்கப்பெற்றுள் ளன. மூன்றாம், ஆறாம் சிவாலயங்களிலே கண்டெடுக்கப்பெற்ற விக்கிரகங்கள் பதினோராம் நூற்றாண்டுக்குரிய சோழர் கலைப்பாணியில் அமைந்துள்ளமையால் அவற்றையும் சோழர்காலத்தன என்று கொள்ளலாம். இலங்கையில் இன்றுள்ள கோயிற் கட்டிடங்களுள் மிகத் தொன்மையானது இரண்டாம் சிவாலயமாகும். அது முதலாம் இராஜேந்திர சோழனின் தாயாரின் பெயரால் வானவன்மாதேவீஸ்வரம் என்று வழங்கப்பெற்றது.



பதவியாவிலே முதலாம் இராஜராஜனது ஆட்சிக்காலத்தில் அம்மன்னனின் விருதுப்பெயர்களுள் ஒன்றை நினைவுகூர்வதான இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்ற பெயரில் சிவாலயம் ஒன்று நிறுவப்பெற்றது. அரச குடும்பத்தவர்களும் வணிக கணத்தினரும் அந்த ஆலயத்துக்கு வழங்கிய நன்கொடைகள் பற்றிய குறிப்புகள், அங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களுள் காணப்படுகின்றன.

சோழர்களால் இராஜராஜபுரம் என்று பெயரிடப்பெற்ற மாதோட்டத்திலே ராஜராஜேஸ்வரம், திருவிராமீஸ்வரம் என்னும் இரு ஆலயங்கள் அவர்களால் அமைக்கப்பெற்றன என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஸ்வரம் என்னும் பெயர்களிலான சிவாலயங்களும் இலங்கையின் வேறு வேறு பிராந்தியங்களில் சோழர்களால் நிறுவப்பெற்றமை கல்வெட்டுச் சான்றுகள்மூலம் அறியவருகிறது. திருகோணமலை மாவட்டத்தைச் சார்ந்த கந்தளாயிலும் சோழர்களால் அமைக்கப்பட்ட சிவாலயம் பற்றி அறிய முடிகிறது. அதனைச் சார்ந்ததாக பிராமணர் குடியிருப்பு ஒன்றும் அவர்களால் அமைக்கப்பெற்றிருந்தது. அப்பகுதியில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டில் அக் குடியிருப்பானது பிரமதேயம் எனவும், இராஜராஜ சதுர்வேதி மங்கலம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் ஆங்காங்கே கண்டறியப்பட்ட கோவிற் சிதைவுகளும் நேர்த்தியான விக்கிரகங்களும் அக்கால இலங்கையில் சைவம் பெற்றிருந்த சிறப்பினைப் பறைசாற்றிநிற்கின்றன.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. திருமூலர் ஈழ நாட்டினைச் 'சிவபூமி' எனச் சிறப்பித்துக் கூறியமைக்கான காரணம் யாது?
2. புராதன காலத்திலேயே ஈழத்தில் சைவசமயம் நிலைபெற்றிருந்தது என்பதனை எடுத்துக் காட்டும் சான்றுகள் யாவை?
3. இலங்கையில் இன்றுள்ள கோயிற் கட்டடங்களுள் மிகத் தொன்மையானது எது?
4. அது யாருடைய பெயரால் வழங்கப்பெற்றது?
5. பதவியாவில் அமைந்த சிவாலயம் எது?
6. கந்தளாயில் அமையப் பெற்றிருந்த பிராமணர் குடியிருப்பு, கல்வெட்டில் எவ்வெவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது?
7. மாதோட்டத்தில் சோழர்களால் நிறுவப்பட்ட சிவாலயங்கள் எவை?

## குழுச் செயற்பாடு

''ஈழத்தில் சைவசமயத்தின் தொன்மை'' என்ற தலைப்பில் குழுவாக முன்னளிக்கை செய்யுங்கள்.

# 20

## திருமந்திரம்
## பெரியபுராணம்
## திருப்புகழ்

### திருமந்திரம்



திருமந்திரம் திருமூல நாயனாரால் அருளப்பட்டது. இது மூவாயிரம் பாடல்களைகளைக் கொண்டது; ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் இனிய சொற்களால், ஆழமான சிந்தனைகளைப் படிப்பவர் மனதில் பதித்துவிடும் முறையில் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. திருமந்திரம் மெய்ஞ் ஞானக் கருத்துக்கள் பொதிந்த சாத்திர நூலாகவும், பக்தியை விளைவிக்கும் தோத்திர நூலாகவும் காணப்படுகின்றது. இதனால் இது 'தமிழ் ஆகமம்' எனவும் போற்றப்படுகிறது.

திருச்சிற்றம்பலம்

சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்து அன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

சிவனுக்கு நிகரான தெய்வம் எங்கு தேடினும் இல்லை; அவனுக்கு ஒப்பானவர் என்று இந்த உலகத்திலும் யாரும் இல்லை; தீச்சுடர் வீசும் சடாமுடியினை உடையவனும் அன்பரது உள்ளமாகிய தாமரை மலரிலே எழுந்தருளுபவனு மாகிய அவன் முன்னொரு காலத்தில் (அயனும் மாலும் அறியாவண்ணம்) புவனம் அனைத்தையும் கடந்து பேரொளிப் பிளம்பாய் மின்னினான்.

## பெரியபுராணம்

சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பெற்றது திருத்தொண்டர் புராணம். அது, இறைவனுக்கு மெய்யன்போடு தொண்டு புரிந்த அடியார்களின் பக்தித்திறத்தைக் கூறுகின்ற ஒரு புராணமாகும். 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'. பெரியவர்களாகிய தொண்டர்தம் பெருமை பேசுவதால் அது பெரிய புராணம் என்றே வழங்கப் பெறுகிறது. சுந்தரமூர்த்தி நாயனார் அடியார் பெருமையை எடுத்துரைப்பதான 'திருத்தொண்டத் தொகை' என்னும் ஒரு பதிகத்தைப் பாடியருளினார். அதனை அடிப்படையாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி' யைப் பாடியருளினார்.




திருத்தொண்டத் தொகையை முதனூலாகவும் திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பாடப்பட்டதே திருத்தொண்டர் புராணம். அதில் அடியார் வரலாறுகளை 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட' விவரிக்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.

தேவாரம் பாடிய மூவரும் தில்லைக்கு வந்தனர்; ஆடுங் கூத்தனைத் தரிசித்தனர். கண்ணுங் கருத்தும் அந்த நடனக் கோலத்திற் பதிந்து விடுகின்றன.

அந்த மூவரும் அடைந்த ஆனந்தத்தை சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில் சித்திரிக்கும் பாங்கு அற்புதமானது. இங்கு தரப்பட்டுள்ள ‘ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள...’ எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல் சுந்தரமூர்த்தி நாயனார் தில்லைத் தரிசனத்தால் பெற்ற அனுபவத்தை எடுத்துரைக்கின்றது.

திருச்சிற்றம்பலம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்பு

சந்திரனைத் தன் சடாமுடியிலே தரித்த இறைவன் ஆடுகின்ற ஆனந்தமயமானதும் எல்லையற்றதும் ஒப்பற்றதுமான திருக்கூத்தைத் தரிசித்ததனால், ஐம்பொறிகள் மூலம் பெறப்படுகின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்பெரும் அறிவும் கட்புலன் என்னும் ஒன்றின் வழியாகவே இயங்கவும், அளவிடற்கரிய சக்தி வாய்ந்த மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கும், மனம் என்னும் ஒன்றின் வழியாகவே தொழிற்படவும், தாமசம், இராஜசம், சாத்விகம் என்னும் முக் குணங்களும், சாத்விகம் என்னும் நற்குணமாகவே அமையவும் பேரின்பமாகிய வெள்ளத்துள் மூழ்கித் திளைத்து ஒப்பற்ற மகிழ்ச்சியிலே மலர்ந்தார்.

## திருப்புகழ்



முருகபக்தர் அருணகிரிநாதரால் பக்திச்சுவை ததும்பப் பாடப்பெற்ற சந்தப் பாடல்கள் திருப்புகழ் என்று பெயர் பெறுகின்றது. முருகப்பெருமான் ‘முத்தைத்தரு பத்தித் திருநகை’ என்று அருண கிரிநாதருக்கு அடியெடுத்துக் கொடுத்தார். முருகன் பெருமையையும் அவனது பெருங்கருணைத் திறத்தையும், பாடுவதையே தம் பணியாகக் கொண்டார் அருணகிரிநாதர்.

திருப்புகழ்ப்பாடல்கள் அவற்றின் கருத்தாழம், சொல்லழகு, இசைத்திறம், தாளச் செறிவு என்பவற்றால் பாடுந்தோறும் தெய்வீக அனுபவத்தைத் தருவன. இன்று ஆலயங்களில் பஞ்சபுராணம் ஓதிய பின்னர் திருப்புகழ் பாடப்படுவது மரபாகிவிட்டது. அறுபடைவீடு கொண்ட குமரக்கடவுளை மட்டுமன்றி விநாயகப் பெருமானையும் துதித்து சில திருப்புகழ்கள் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு பாடல் இங்கு இடம் பெறுகிறது.

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயர் அதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம் அருள் பெருமாளே

## பொழிப்பு

*கரதலத்திலே நிறைந்துள்ள பழம், அவல், பொரி, அப்பம் முதலியவைகளை அருந்துகின்ற யானை முகத்தையுடைய கணேசமூர்த்தியின் திருவடிக் கமலங்களை விரும்பிக், கற்கின்ற அடியாரது சித்தத்திலே எப்போதும் நீங்காது வாழ்கின்றவரே! நினைத்ததைத் தரவல்ல கற்பக விருட்சம் போல், தொண்டர்கள் நினைந்தவை எல்லாம் எளிதில் தரவல்ல வள்ளலே!*

எல்லா மொழிகளுக்கும் முற்படுமாறு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நூல் முறைமையை மலைகளுக்குள் முதன்மையுடைய மகா மேருமலையில் எழுதியருளிய முதன்மையானவரே! திரிபுரங்களைச் சிரித்து எரிகொளுத்திய சிவபெருமான் எழுந்தருளிய பெரிய தேரினுடைய அச்சை (தன்னை நினையாத காரணத்தால்) ஒடித்து துகள்செய்த மிகுந்த வலிமை உடையவரே! இன்பரச சக்தியாகிய வள்ளிப் பிராட்டியாரைத் திருமணம் புரிந்து உயிர்களுக்கு இன்பத்தை அருளவேண்டுமென்று கருணைகொண்டு, தினைப்புனத்திற்குச் சென்ற குமாரக் கடவுள் வள்ளிப் பிராட்டியார் இசையாமையால் யானை வடிவங்கொண்டு குறவர் குடியில் தோன்றிய வள்ளி நாயகியாருடன் என்றும் இளைய பெருமாளாகிய அறுமுகக் கடவுளை மணம் புணர்த்தி திருவருள் பாலித்த பெருமையிற் சிறந்தவரே! என்று துதி செய்தால் வினைகள் அனைத்தும் விரைவில் விலகும். ஆதலால் ஊமத்த மலரையும் பிறைச் சந்திரனையும் சடாமகுடத்தில் சூடிக் கொண்டுள்ள, பாவங்களை அழிப்பவராகிய சிவபெருமானது திருக்குமாரரும், திரண்ட தோள்களையுடைவரும், மத நீரைப் பொழிகின்ற யானை முகத்தை உடையவருமாகிய விநாயக மூர்த்தியை, மத்தளம் போன்ற அழகிய திருவயிற்றை உடையவரை, உத்தமியாகிய பார்வதி தேவியாரது அருட் புதல்வரை, தேன் சொட்டும் புதுமலர்களால் அர்ச்சித்து அன்புடன் வணங்குவேன்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. திருமந்திரம் 'தமிழ் ஆகமம்' என்று போற்றப்படுவதற்கான காரணம் யாது?
2. திருமூலர், திருமந்திரப்பாடலில் சிவபெருமானை எவ்வாறு போற்றியுள்ளார்?
3. திருத்தொண்டர் புராணத்தின் முதல் நூலும், வழி நூலும் யாவை?
4. திருத்தொண்டர் புராணத்தை, பெரிய புராணம் என்று ஏன் அழைக்கிறோம்?
5. இறைவனது நடராஜ மூர்த்தத்தைக் தரிசித்த சுந்தரரின் பக்தி அனுபவம் எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது?
6. திருப்புகழில் போற்றப்பட்ட, விநாயகப் பெருமானின் அருட் செயல்கள் மூன்று தருக.
7. அறுபடை வீடுகள் எவை?

## குழுச் செயற்பாடு

பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ள திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் இருவரினதும் தில்லைத் தரிசனம் பற்றிய பெரிய புராணப் பாடல்களை எழுதுங்கள்.

# ஈழத்து ஆலயங்கள்

# 21

## அ) விநாயகர் ஆலயம்

### கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்



கண்டி மாநகரில் கட்டுக்கலை என்னும் பகுதியில் பிரசித்திபெற்ற ஒரு ஆலயம் அமைந்துள்ளது. அந்த ஆலயத்தின் மூலவராக மீனாட்சியம்பாள் சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் (சிவபிரான்) வீற்றிருக்கிறார். எனினும் அந்த ஆலயம் செல்வவிநாயகர் கோயில் என்றே வழங்கப்பெறுகிறது. சிங்கள மக்களும் அந்த ஆலயத்தை 'கணதெவி கோவில்' என்றே கூறுகிறார்கள். அந்த ஆலயம் விநாயகர் பெயரில் வழங்கப்பெறுவதற்கு ஆலயத்தோடு தொடர்புபட்ட வரலாற்று அம்சம் ஒன்றே காரணமாய் அமைந்தது எனலாம்.

ஆலயம் இன்று அமைந்திருக்கும் இடத்துக்கு அருகில் முன்பு பெரிய ஒரு குளம் அமைந்திருந்தது. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் சலவைத் தொழிலாளர்கள், அரச குடும்பத்தவர்களின் ஆடைகளை அக்குளத்திலேயே துவைப்பார்கள். இந்தியாவிலிருந்து வருகைதந்திருந்த ஸ்ரீ குருசாமி என்னும் சன்னியாசியும் அவரது பக்தரும் அக்குளத்துக்கு அருகில் தங்க நேர்ந்தது. ஒரு நாள் அச்சன்னியாசி அக்குளத்தின் கரையில் இருக்கும் அரசமரத்தருகே உள்ள சிறு குன்றின் அடிவாரத்தை ஒட்டியதாக விநாயகர் சிலை ஒன்று இருப்பதைத் தன் கனவிலே கண்டுணர்ந்தார். அடுத்தநாள் காலை குளக்கரையை அடைந்த அச்சன்னியாசி, மக்களின் உதவியோடு அந்த விநாயகர் சிலையைக் கண்டெடுத்தார். குப்புறக் கிடந்த அந்த சிலையை வெறும் கல்லென்று கருதிய சலவைத் தொழிலாளர்கள் அதுவரை காலமும் அதிலேயே ஆடை துவைத்து வந்திருக்கிறார்கள். அறியாது செய்த தவறுக்கு அவர்கள் எல்லோரும் வருந்தினார்கள். அச்சூழலில் ஏற்கனவே சோமசுந்தரேஸ்வரர் வீற்றிருந்த கோவிலில் அந்த விநாயகரையும் பிரதிஷ்டை செய்தார்கள். பிற்காலத்தில் சோமசுந்தரேஸ்வரருக்கும் விநாயகருக்கும் ஒரு சேரக் கோயில் கட்டப்பெற்று பூசை வழிபாடுகள் நிகழ்ந்தன. தற்போது விமானங்கள், கோபுரங்களோடும் பெரு மண்டபங்களோடும் அமைந்து நித்திய, நைமித்திய கிரியைகள் மிகச் சிறப்புற நடைபெறும் ஆலயமாக அது விளங்குகிறது.

இவ்வாலயம் சிங்கள மக்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிபாட்டுத் தலமாகும். கண்டி தலதா மாளிகையில் வருடாந்தம் இடம் பெறும் பெரஹரா, கண்டி மன்னர்கள் காலம் முதலாக செல்வவிநாயகர் ஆலயத்தோடும் தொடர்புபட்டதாகவே நடைபெற்று வருகிறது.

ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னன் காலம் முதலாக இந்த ஆலயத்தில் மஹோற்சவம் சிறப்புற நடைபெற்று வருகிறது. இப்போதும் பங்குனி உத்தரத்தை இறுதி நாளாகக் கொண்டு மஹோற்சவம் சிறப்புற நடைபெறுகிறது. அன்றைய தினம் தீர்த்தோற்சவமும் அதற்கு முன் தினம் இரதோற்சவமும் இடம்பெறுகின்றன.

இரதோற்சவத்தின்போது பஞ்சரதங்கள் கண்டிமாநகர வீதிகளில் பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

## ஆ) சிவாலயங்கள்

### 1. ஈழத்துச் சிதம்பரம்




காரைதீவு என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டை அண்மித்துக் காணப்படும் தீவுகளுள் ஒன்றாகும். தற்போது காரைநகர் என்று அழைக்கப்படும் இத்தீவில் கடற்கரை ஓரமாக சிவாலயம் ஒன்று அமைந்துள்ளது. அது ஈழத்துச் சிதம்பரம் என்று பிரசித்தி பெற்றுள்ளது.

ஒருமுறை தமிழ் நாட்டிலிருந்து ஈழத்திற்குத் தலயாத்திரை மேற்கொண்ட ஆண்டி என்பவர் காரைநகர் வந்தார். அங்கே குளக்கோட்டு மன்னனால் அமைக்கப் பட்ட ஐயனார் ஆலயம் அழிவுற்ற நிலையில் காணப்பட்டது. அதைக்கண்டு வருந்திய

ஆண்டி, அங்கிருந்த அரசமரத்தடியில் தாம் கொண்டுவந்த வைரவ சூலத்தை வைத்து வழிபாடு செய்தார். அதன் அருகில் கேணியொன்றையும் தோண்டினார். கேணியைத் தோண்டும்போது மண்ணுள் இருந்து பூரணை, புஸ்கலை சமேத ஐயனார் விக்கிரகம் ஒன்று வெளிப்பட்டது. அவ்விடத்தில் ஆலயம் அமைத்து ஐயனாரைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். காரைதீவு களபூமியைச் சேர்ந்த செல்வந்தரான அம்பலவி முருகர் என்பவர் அந்த ஆலயத்தைப் பெரிதாகக் கட்டி கும்பாபிஷேகம் செய்தார். அதன் வடக்குப் பக்கத்தில் ஒரு சிவாலயத்தையும் நிறுவினார். அதுவே காரைநகர் சிவாலயம் ஆகும்.

இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களைக் கொண்டமைந்துள்ளது. இங்கு வீற்றிருக்கும் இறைவன் சுந்தரேசுவரர்; இறைவி சௌந்தராம்பிகை. தலவிருட்சங்களாக அரசு, வன்னி, இலுப்பை ஆகியனவும் தீர்த்தங்களாக பரமானந்த கூபம், சித்தாமிர்த வாவி, துர்வாச சாகரம் ஆகியனவும் அமைந்துள்ளன. தென்னிந்தியாவின் சிதம்பரத்தில் நடைபெறுவது போன்றே இவ்வாலயத்திலும் கிரியைகள் நடைபெறுவதால் இத்தலத்தை ‘ஈழத்துச் சிதம்பரம்’ என்று அழைப்பர்.

இங்கு வருடத்திற்கு மூன்றுமுறை (பங்குனி, ஆடி, மார்கழி ஆகிய மாதங்களில்) திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பங்குனிமாத உற்சவம் பதினொரு நாட்களும், ஆடிமாத உற்சவம் பத்து நாட்களும், மார்கழிமாத உற்சவம் பத்து நாட்களும் நடைபெறும். இவற்றில் மார்கழித் திருவாதிரைவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

## 2. பொன்னம்பலவாணேச்சரம்




கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில், பிரசித்தி பெற்ற சிவாலயமாக, பொன்னம்பலவாணேச்சரம் விளங்குகின்றது. திராவிடக் கட்டடக் கலைப்பாணியில் முற்றிலும் கருங்கல்லால் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

பொன்னம்பல முதலியார் அவர்கள் 1857ஆம் ஆண்டில் செங்கல்லால் இக் கோயிலைக் கட்டினார். பின்னர், முதலியாரின் மகன் சேர் பொன். இராமநாதன் அவர்கள் 1905 ஆம் ஆண்டு கருங்கற் கோயிலாக அதனைப் புனர்நிர்மாணம் செய்தார். தென்னிந்திய சிற்பிகளால் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் ஈழத்து ஆலயங்களுள் கலைநுட்பம் மிகுந்ததாகும்.

இங்கு வீற்றிருக்கும் இறைவனது திருநாமம் பொன்னம்பலவாணேசர்; இறைவி சிவகாமி அம்பாள். தீர்த்தம்: சுவர்ண புஷ்கரணி, தலவிருட்சம்: அரசு.

இங்கு தினமும் ஆறுகாலப் பூசைகளும் சிவராத்திரி முதலான நைமித்திய கிரியைகளும் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன. குறிப்பாக, நித்திய அக்கினி வளர்க்கப்படுவது சிறப்பம்சமாகும். வருடாந்த மகோற்சவம் பத்துத் தினங்கள் நடைபெற்று, பங்குனி உத்தரத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறுகின்றது.

## இ) அம்மன் ஆலயங்கள்

### 1.மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்



மத்திய மாகாணத்தின் மாத்தளை மாநகரில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகின்றது. மாத்தளை, முற்காலத்தில் பன்னாகம் என்று அழைக்கப்பட்டது.

தென்னிந்தியாவிலிருந்து பெருந்தோட்ட வேலைகளுக்காக அழைத்துவரப்பட்ட மக்களில் ஒரு குழுவினர் மாத்தளையில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுள் ஒருவரின் கனவில், அம்பாள் தோன்றி, வில்வமரத்தடியில் தன் திருவுருவம் இருப்பதாகவும் அதனை வைத்து பூசை செய்யுமாறும் பணித்தாள். அவரும் அம்மரத்தடியில் சிறுகுடில் அமைத்து அம்பாளை வழிபட்டார்.

சிறுகுடிலாக இருந்ததை, சுப்பையாபிள்ளை என்பவர் ஆலயமாகப் புனரமைத்தார். அதனைச் சூழ இருந்த நிலங்களையும் வாங்கி, ஆலயத்திற்கு வழங்கினார்.

ஆலயத்தில், வடதிசை நோக்கிய மூலஸ்தானத்தில் வீற்றிருந்து முத்துமாரி அம்பாள் அருள்பாலிக்கிறாள். பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், வள்ளி தெய்வானை

சமேத முருகன், முத்து மீனாட்சி சமேத சோமசுந்தரேஸ்வரர், ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீரங்கநாதர், நடராஜர் ஆகிய கடவுளர்கள் வீற்றிருக்கிறார்கள். இவ்வாலயம் அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம் முதலியவற்றையும் 108 அடி உயர நவதள இராஜகோபுரத்தையும் கொண்டதாய் அமைந்து அழகோடு காட்சிதருகின்றது.

இங்கு தினமும் ஐந்து காலப் பூசைகள் நடைபெறுகின்றன. மாசி மாதத்தில் மகோற்சவம் பத்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெறுகிறது. இரதோற்சவத்தன்று பஞ்சரத பவனி இடம்பெறுகின்றது. இவ்வாலயத்தில் இந்துக்கள் மட்டுமல்லாமல் பௌத்தர்களும் வழிபாடுகளைச் செய்துவருகின்றார்கள்.

## 2. பெரிய போரதீவு பத்திரகாளியம்மன் ஆலயம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் பெரியபோரதீவு எனும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு பாரம்பரிய கிராமிய வழிபாட்டு முறையே பின்பற்றப்படுகின்றது.

தெய்வக்கம்மியர் என்ற சமூகத்தினர் தமிழ் நாட்டிலிருந்து பெரியபோரைதீவை வந்தடைந்தனர் என்பதும் அவர்களே தங்கள் குலதெய்வமான காளி அம்பாளுக்கு ஓர் ஆலயத்தை நிறுவி வழிபட்டார்கள் என்பதும் ஐதிகம்.

மடாலயமாக இருந்த இவ்வாலயம் இன்று கர்ப்பக்கிருகம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு திகழ்கின்றது. இங்கு நித்திய பூசை நடைபெறுவதில்லை. நேர்த்திக்கடன் செய்யும் ஆலயமாக இது விளங்குகின்றது. வெள்ளிக்கிழமைகளில் சிறப்புப் பூசையும் தைப்பூசம், சிவராத்திரி, வைகாசி குளுத்தி, கார்த்திகைப் பூசை ஆகியவையும் விசேடமாக நடைபெறுகின்றன. வருடாந்த உற்சவம் புரட்டாதி மாதத்தில் மிகச்சிறப்பாக நடைபெறும். இந்த உற்சவம் இந்த ஆலயத்துக்கேயுரிய தனித்துவமான அம்சங்கள் பலவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது. இங்கு தீக்குளிப்பு வைபவம் விசேடமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் இறைவன் யார்?
2. காரைநகர் சிவன் கோயில் 'ஈழத்துச் சிதம்பரம்' என்று அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
3. இலங்கையில் திராவிடக் கட்டடப் பாணியில் கலை நுட்பத்துடன் கட்டப்பட்ட கருங்கற்கோயில் எது? இங்கருங்கற் பணியைச் செய்தவர் யார்?
4. வடதிசை நோக்கிய மூலஸ்தானம் எத் திருத்தலத்துக்குரியது?
5. பஞ்ச இரதங்கள் பவனிவரும் ஆலயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
6. போரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயம் எங்கே அமைந்துள்ளது?
7. அந்த ஆலயத்தில் விசேடமாக நடைபெறும் வைபவம் யாது?

## ஈ) முருகன் ஆலயங்கள்

### 1. தாந்தாமலை முருகன் ஆலயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை என்னும் கிராமத்திற்கு மேற்கே சுமார் பத்து மைல் தொலைவில் தாந்தாமலை முருகன் ஆலயம் அமைந்துள்ளது. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பொன்னை வைப்புத் திரவியமாகக் கொண்ட இடமாதலால் இது பொக்கிஷ மலை என்றும் குறிப்பிடப்படுகின்றது. தான்தோன்றீஸ்வரர் தாண்டவமாடிய இடமாதலால் இத்தலத்தை 'தாண்டவமலை' என்றும் அழைத்தனர். அதுவே மருவி 'தாந்தாமலை' என வழங்கலாயிற்று என்பர்.



வடக்குத் தெற்காக நீண்டு பரந்த பல குன்றுகளைக் கொண்டது தாந்தாமலை. இதன் உச்சியில் பிள்ளையார் ஆலயமும் அடிவாரக் குன்றில் முருகன் ஆலயமும் அதற்கு எதிர்ப்புறமாக வள்ளியம்மன் ஆலயமும் அதன் ஒரு மருங்கில் கிருஷ்ணன் கோவிலும் மறுபக்கத்தில் முத்துலிங்க சுவாமி கோவிலும் அமைந்துள்ளன. முருகன் ஆலயத்தின் இடது பக்கத்தில் தெய்வானை அம்மன் ஆலயம் அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மலைகளின் அடிவாரத்தில் ஆலயத்தின் தீர்த்தக்குளம் காணப்படுகின்றது.

முற்காலத்தில் மழை பெய்யாமல் வரட்சி ஏற்பட்டபோது தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று தாந்தாமலையின் உச்சியிலுள்ள விநாயகப்பெருமானுக்குப் பொங்கல் விழா நடத்தியபோது மழை பெய்ததாகக் கூறுவர். இதனை இப்பகுதியின் இந்திரவிழா எனக் குறிப்பிடுவர்.

விநாயகர் வழிபாட்டிடமாக இருந்து, பின் முருக வழிபாட்டிடமாக மாற்றம் பெற்றது இத்தலம். ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் பன்னிரு நாட்கள் நடைபெறும் உற்சவம் ஆடிப் பௌர்ணமி தினத்தில் தீர்த்தத்திருவிழாவுடன் நிறைவடையும்.

## 2. செல்வச்சந்நிதி



இலங்கைத் திருநாட்டின் புகழ்மிக்க முருகன் ஆலயங்களில் ஒன்றாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் விளங்குகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் தொண்டைமானாற்றின் கரையில் இவ்வாலயம் அமைந் துள்ளது. இங்கு மூலவராக 'வேல்' வழிபடப்படுகின்றது. இவ்வாலயத்தின் அமைப்பு, வழிபாட்டு முறைகள் தனித்துவம் கொண்டவையாக விளங்குகின்றன. இங்கு பெருந்தூபிகளையோ பெருவிமானத்தையோ காணமுடியாது. ஆலயத்தின் எந்த பகுதியிலிருந்து பார்த்தாலும் தீபாராதனைகளைப் பார்க்கக் கூடியவகையில், ஆலய அமைப்புக் காணப்படுகின்றது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் தனித்துவமான சைவாசார முறைப்படி, பூசைகளும் கிரியைகளும் திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன. சந்நிதியின் பிரதம பூசகர் பட்டுவேட்டி, இடுப்புத்துண்டுடன் வெள்ளைத்துணியால் வாயைக் கட்டி மௌன பூசை செய்வார். முருகனுக்கு நிவேதனமாக அறுபத்து ஐந்து ஆலம் இலைகளில் பச்சையரிசிப் பொங்கல் படைக்கப்படும்.

இவ்வாலயத்திலும் அதனைச் சுற்றிக் காணப்படும் பல மடங்களிலும் தினமும் அன்னதானம் நடைபெறுகின்றது. இதனால் இங்கு வீற்றிருந்து அருள் பாலிக்கும் இறைவனை அன்னதானக் கந்தன் என சிறப்பாக அழைப்பர்.

ஆவணி மாதத்துப் பூரணையைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு பதினைந்து நாட்கள் இங்கு மகோற்சவம் நடைபெறும். கந்தசஷ்டி விரத காலத்தில் பல அடியார்கள் ஆறு நாட்களும் கோயிலிலேயே தங்கியிருந்து விரதத்தைத் தவமாகவே அனுஷ்டிப்பர்கள்.

## உ) விஷ்ணு ஆலயங்கள்

### 1. திமிலைதீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம்



மட்டக்களப்பு நகரிலிருந்து தென்மேற்குத் திசையில் சுமார் இரண்டரை மைல் தூரத்தில் நாற்புறமும் நீரால் சூழப்பெற்ற ஓர் நிலப்பரப்பாக திமிலைத் தீவு எனும் கிராமம் விளங்குகின்றது. கடற்றொழிலே இத்தீவு மக்களின் பிரதான தொழிலாக அமைந் துள்ளது. திமில் என்ற சொல் படகு என்று பொருள்படும். திமிலைத் தீவு என்ற பெயருக்கு அதுவே காரணமாதல் கூடும். இத்தீவின் தென்பகுதியில் மகா விஷ்ணு ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. பரந்து விரிந்து நிற்கும் அரசமரத்தின் அடியில் மகாவிஷ்ணு மூலவராக

வீற்றிருக்கிறார். அவரின் இடப்பாகத்தில் முருகர், வலப்பாகத்தில் சனீஸ்வரர் ஆகியோரும் வீற்றிருக்கும் சிறிய மண்டபமாக இக்கோயில் விளங்குகின்றது. இங்கு வருடந்தோறும் வைகாசி மாதம் பத்து தினங்களுக்கு விசேட திருவிழா நடைபெறுகின்றது.

இங்கு நடைபெறும் திருவிழாச் சடங்குகள் யாவும் நாடகப் பாங்கிலேயே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாலயத்தில் முன்பு நடைபெற்று வந்த சடங்கு முறைகளே பிற்காலத்தில் வருடாந்த விழாக்களாக மாற்றியமைக்கப்பட்டன. அவை கண்ணனின் லீலைகளான கம்சன் வதை, உரலில் கட்டுண்ட கண்ணன் மருதமரங்களைச் சாய்த்தல், ருக்மணி கல்யாணம் முதலானவை ஆகும்.

## 2. வண்ணை வரதராஜப்பெருமாள் ஆலயம்



இலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் விஷ்ணு ஆலயங்களில் ஒன்றாக யாழ்ப்பாண நகரின் வண்ணார்பண்ணைப் பிரதேசத்தில் அமைந்துள்ள

ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம் விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தின் புராதனமான இந்து ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாலயமானது, தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட பத்மசாலி செட்டிபிள்ளைமாரால் அவர்களின் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டதாகும்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் வீற்றிருக்கின்றார்; தலவிருட்சம் பலா மரமாகும். இது ஆலயத் தின் உட்பிரகாரத்தில் அம்மன் சந்நிதிக்குப் பின்புறமாகக் காணப்படுகின்றது.

இவ்வாலயத்தில் நித்திய பூசைகள் மூன்றுவேளை நடைபெறுகின்றன. அத்துடன் கிருஷ்ண ஜெயந்தி, இராமநவமி, வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி, உறியடி உற்சவம், திருவிளக்குப்பூசை முதலானவை சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதி - ஐப்பசி மாதங்களில் வருடாந்த மகோற்சவம் நடைபெறும்.

திராவிடக் கலைப்பாணியில் அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயத்தில் ஏழு அடுக்குகளைக் கொண்டதாகக் கோபுரம் காணப்படுகின்றது. இக்கோபுரத்தின் ஏழு அடுக்குகளிலும் விஷ்ணுவின் தசாவதாரங்களும், கண்ணனின் லீலைகளும், இராமாயணக் கதையும் ஆழ்வார்களின் திருவுருவங்களும் சுதைச் சிற்பங்களாய் மிகச் சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு அப் பெயர் வரக் காரணம் யாது?
2. இப்பிரதேசத்தின் இந்திரவிழா எனக்குறிப்பிடப்படுவது யாது?
3. செல்வச் சந்நிதி ஆலயத்தின் மூலவர் யார்?
4. சந்நிதிக் கந்தன் 'அன்னதானக் கந்தன்' என்று அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
5. திமிலைத்தீவு ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய வருடாந்த உற்சவத்தில் இடம்பெறும் கண்ணனோடு தொடர்புடைய கதையம்சங்கள் எவை?
6. வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலய மூலவர் யார்?
7. இவ்வாலயக் கோபுரத்திற் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளவை எவை?

## குழுச் செயற்பாடு

உங்கள் ஊரிலுள்ள ஆலயம் ஒன்றின் தோற்றம், வளர்ச்சி, சிறப்பு என்பவை பற்றி உரை நிகழ்த்துங்கள்.

## பின்னிணைப்பு

### (அ) சைவ சமயப் பண்டிகைகள்

இவ்வுலக வாழ்க்கை இனிமையாக அமைய வேண்டும். அது மறுமை வாழ்வுக்கும் உதவ வேண்டும். இதுவே சைவ சமயப் பேரறிஞர் கருத்து. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே சைவர்கள் சமயப் பண்டிகைகளை வகுத்திருக்கின்றனர்.

ஆண்டுதோறும் பல பண்டிகைகளை சைவ சமயத்தவர் கொண்டாடு கிறார்கள். அவற்றுள் தைப்பொங்கல், சித்திரைப்புத்தாண்டு, தீபாவளி என்பன முக்கியமானவையாகும்.

### 1. தைப்பொங்கல்

தை மாதப் பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும் கொண்டாட்டம் பொங்கல் பண்டிகை எனப்படும். இது உத்தராயணத்தின் முதல் நாளாகும்.

சூரிய பகவானுக்கு நன்றிக் கடன் செலுத்தும் நாளாகவே தைப்பொங்கல் கருதப்படுகிறது. அடுத்த நாள், தம் உழவுத்தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் கால் நடைகளுக்குப் பொங்கி உணவு கொடுத்து மகிழ்வர்.

### 2. சித்திரைப் புத்தாண்டு

சித்திரை மாத முதலாம் திகதி புத்தாண்டு கொண்டாடப்படுகிறது. சூரியன் மேடராசியில் புகும் நாளாக இது காணப்படுகிறது. புத்தாண்டு தினத்தில் மக்கள் மருத்துநீர் வைத்து நீராடுதல், கைவிசேடம் பெறுதல் மரபாகும். இந்துக்களின் வருட ஆரம்பநாள் இதுவாகும். சித்திரை முதல் பங்குனி ஈறான காலமே ஒரு ஆண்டாகக் கணிக்கப்படுகிறது.

### 3. தீபாவளி

தீப + ஆவளி தீபாவளி எனப்படும். இது தீப வரிசை என்று பொருள்படும். ஐப்பசி மாதத்து அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசியில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அதிகாலையில் எண்ணெய் தேய்த்து, வெந்நீரில் நீராடுவர். தீபாவளியன்று தீபங்களை வரிசை வரிசையாக ஏற்றி இன்புறுவர். மனதில் இருளை அகற்றி ஒளியைப் பெருக்குவதே இப்பண்டிகையின் பொருளும் நோக்கமாகும்.

## (ஆ) பௌத்த சமயப் பண்டிகைகள்

### 1. சித்திரைப் புத்தாண்டு

இந்துக்களைப்போன்றே பௌத்தர்களும் சித்திரைப் புத்தாண்டை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவர். சுப நேரத்தில் மண்பானையில் பால் பொங்க வைத்து அதன் பின்பே சமையலை ஆரம்பிப்பர். மேலும் எண்ணெய் தேய்த்தல், கைவிசேடம் பெறுதல் முதுலியனவும் சிறப்பான சடங்குகளாக மேற்கொள்ளப்படும்.

### 2. வெசாக் பண்டிகை

வைகாசி மாத விசாக நட்சத்திரத்தன்று இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. புத்தர் பெருமானது பிறப்பு, அவரது ஞானோதயம், பரிநிர்வாணம் ஆகிய மூன்று சம்பவங்களையும் நினைவு கூர்வதே வெசாக் பண்டிகை ஆகும். இந்நாளில் வெசாக் கூடுகளை அமைத்தல் சிறப்பான அம்சமாகும்.

2500 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவில் லும்பினி வனத்தில் புத்தர் பிறந்தார். எண்பது ஆண்டுகள் வாழ்ந்தார். குசிநாரா நகரத்திலுள்ள உபவர்த்தனம் என்ற பூங்காவில் பரிநிர்வாணம் அடைந்தார்.

## (இ) இஸ்லாமிய சமயப் பண்டிகை

### 1. ஈதுல் - பித்ர் (ஈகைப் பெருநாள்)

ஒரு மாத காலம் நீடிக்கும் றம்ழான் மாத நோன்பின் முடிவில் இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது. இப்புனித நோன்புக் காலத்தில் இஸ்லாமியர், ஏழைகளுக்கு இயன்றளவு தானம் செய்வர். அதனாலேயே இது ஈகைப் பெருநாள் எனவும் அழைக்கப்படுகிறது.

### 2. ஈதுல் - அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்)

இப்பிராஹிம் நபி அவர்கள் செய்த தியாகத்தை நினைவு கூர்வதாக இப்பண்டிகை அமைகிறது. இது துல்ஹச் மாதத்தின் பத்தாம் பிறையின் போது கொண்டாடப்படுகிறது.

## (ஈ) கிறிஸ்தவ சமயப் பண்டிகைகள்

### 1. கிறிஸ்மஸ் (நத்தார் விழா)

மீட்பரான இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்வதாக இப் பண்டிகை அமைகிறது. இதையொட்டி கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி நள்ளிரவில் தேவாலயங்களில் வழிபாட்டில் ஈடுபடுவர்.

கிறிஸ்தவர்கள், இறைமகன் இயேசு பிறந்த நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் பாலன் பிறப்பு உருவங்களை வீடுகளில் அமைப்பர்; பக்திப்பாடல்களையும், கரோல் கீதங்களையும் இசைப்பர்.

## 2. ஈஸ்டர் பண்டிகை (பாஸ்கா)

பாஸ்கா என்ற சொல் கடந்து செல்லுதல் என்று பொருள்படும். அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு கடந்து செல்லுதல், சாவிலிருந்து வாழ்வுக்குக் கடத்தல் எனும் ஆழ்ந்த பொருளைப் பாஸ்கா குறிக்கிறது.

நாற்பது நாட்கள் தவக்காலத்தின் ஈற்றில் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி, உயிர்த்த ஞாயிறு என்பன நினைவு கூரப்படுகின்றன. கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் விளக்கும் திருப்பாடுகளின் காட்சிகளை நாடகங்களாக மேடையேற்றுகின்றனர். உயிர்த்தெழுந்த கிறிஸ்து இன்றும் தம்முடன் வாழ்வதாக கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர்.